விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JANUARY ஜனவரி
23 24 25
10.00 மு.ப - 8.00 பி.ப
Muttraweli Grounds முற்றவெளி மைதானம்
JITF 2026
இன்னும் 8 நாட்களில்
ORGANIZED BY LECS LANKA EXHIBITION

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 027 வள்ளுவர் ஆண்டு 2057 தை 01 வியாழக்கிழமை (15.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## வடக்கு மாகாண அபிவிருத்திக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும்

### கடற்றொழில் அமைச்சரிடம் அவுஸ்திரேலியத் தூதுவர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண அபிவிருத்திக்கு அவுஸ்திரேலியா முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என கடற்றொழில் அமைச்சரிடம் இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதுவர் உறுதியளித்தார்.

15ஆம் பக்கம் பார்க்க



## 'முழு நாடுமே ஒன்றாக' வேலைத்திட்டத்தின்

## வட மாகாண நிகழ்வு நாளை

### ஜனாதிபதி தலைமையில் கொக்குவிலில்

(யாழ்ப்பாணம்)

தேசிய அச்சுறுத்தலாக மாறியுள்ள நச்சுப் போதைப்பொருட்களை இல்லாதொழிக்கும் நோக்கத்துடன் செயற்படுத்தப்படுகின்ற "முழு நாடுமே ஒன்றாக" தேசிய வேலைத்திட்டத்தின் வட மாகாண நிகழ்வு நாளை 16ஆம் திகதி, யாழ்ப்பாணம், கொக்குவில், தொழில்நுட்ப கல்லூரி விளையாட்டு மைதானத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் இடம்பெறவுள்ளது.

12ஆம் பக்கம் பார்க்க

## மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படாது

### பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

2026ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் (ஜனவரி - மார்ச்)

15ஆம் பக்கம் பார்க்க

# யாழ்ப்பாணம், மன்னாருக்கு ஜனாதிபதி இன்று விஜயம்

## பொங்கல் நிகழ்வு உட்பட பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பார்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இன்றுவியாழக்கிழமையாழ்ப்பாணம் மற்றும் மன்னாருக்கு விஜயம் செய்யவுள்ளார். பொங்கல் நிகழ்வு உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)



### யாழ்ப்பாணம் தாவடியில்

## கட்சி அலுவலகம் ஒன்றின் மீது தீ வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், தாவடிப் பகுதியில் அமைந்துள்ள சர்வஜன அதிகாரம் கட்சியின் அலுவலகம் மீது நேற்று முன்தினம் (13) நள்ளிரவு இனந்தெரியாத

15ஆம் பக்கம் பார்க்க




### திருகோணமலை புத்தர் சிலை விவகாரம்

## நான்கு பௌத்த பிக்குகள் உள்ளிட்ட 9 பேரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(திருகோணமலை)

திருகோணமலை பிரதான கடற்கரைப் பகுதியில் வைக்கப்பட்ட சர்ச்சைக்குரிய புத்தர் சிலையுடன் தொடர்புடைய நான்கு பௌத்த பிக்குகள் உள்ளிட்ட ஒன்பது பேரை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றம் நேற்று (14) உத்தரவு பிறப்பித்துள்ளது.

குறித்த வழக்கானது நேற்று (14) புதன்கிழமை திருகோணமலை நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதிபதி குறித்த

12ஆம் பக்கம் பார்க்க

## பால்மா விலையை குறைக்க இணக்கம்

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின்விலையை குறைப்பதற்கு பால்மா இறக்குமதியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக

15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.போதனாவில் சிகிச்சை பெற வந்தவர்

### பாதுகாப்பு உத்தியோகத்தரை கத்தியால் வெட்டிவிட்டு தப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்த நபர் ஒருவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரைக் கத்தியால் வெட்டிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

யாழ்.போதனா வைத்திய

15ஆம் பக்கம் பார்க்க

### சுப்பர்மடத்தில்

## கஞ்சாவுடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுப்பர் மடம் பகுதியில் கஞ்சாவுடன் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று மதியம் யாழ்ப்பாணம் சுப்பர்மடம் கடற்கரை

15ஆம் பக்கம் பார்க்க

## இன்பர்சிட்டி கடற்கரையில் 40 கிலோ கஞ்சா மீட்பு

### இரு சந்தேகநபர்கள் கைது



12ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலாயுதன் தேவசேனாதிபதி LLB, கொழும்பு (அருள் கல்வி வட்டம்) G.C.E.(O/L) க.பொ.த (சா/த) முற்றிலும் இலவசக் கருத்தரங்கு - 2026

(வட மாகாண ஆளுநரின் முழு அனுமதி ஆலோசனையுடன் நடைபெறவுள்ளது)

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 16.01.2026 வெள்ளி | நெல்லை முருகன் திருமண மண்டபம் (நெல்லியடி) | மு.ப 8.30 - பி.ப 2.00 |

- Tutes முற்றிலும் இலவசமாக வழுங்கப்படும்.
- G.C.E.(O/L) கடந்தகால வினாவிடைத்தொகுப்பு புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.

**குறிப்பு : மாணவர்கள் பாடசாலை சீருடையுடனும் பொறுப்பாசிரியர்களுடனும் வருகை தர வேண்டும்.**

அனைவரும் கலந்துகொண்டு பயன்பெறவும்.

**செயலமர்வின் அமைப்பாளர்கள்**

1. திரு.வேலாயுதன் தேவசேனாதிபதி L.L.B(சிரேஷ்ட சட்டத்தரணி), தலைவர் - EDCC (தொ.பே : 0771133400)
2. திரு.வே.சுந்தரேஸ்வரன் (இளைப்பாறிய பிரதி முகாமையாளர்) தேசிய லொத்தர் சபை தொ.பே: 0773850841
3. திரு.கந்தசாமி சக்திதரன், பொது செயலாளர் EDCC, இலங்கை, தொ.பே: 0770703360
4. திரு.ப.சுதர்சன் (பிரதிக்கல்விப் பணிப்பாளர் வலயக்கல்வி அலுவலகம்) தொ.பே: 0773144527

**இணை அனுசரணை கல்விக் காருணியன் E.S.P நாகரட்ணம்**
(கஜமுகன் ஹாட்வெயர்) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே :021 222 2833

(C-4821)

# கேள்வி அறிவித்தல்

## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்

## சபைநிதி மூலமான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள்

01. நல்லூர் பிரதேச சபை சார்பாக பிரதேச பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகுதி வாய்ந்த ஒப்பந்த காரர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளை கோருகின்றார்.
02. விலைக்கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கோரப்படுகின்றது.
03. விலைக்கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் Bidding Data இல் கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **'தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில்'** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணமொன்றை **தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் முகவரியில் 2026.01.16 ஆம் திகதியிலிருந்து 2026.01.29 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 03.00 வரையும்** மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா. 6,000.00 உம்** (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
07. கேள்வி ஆவணத்தை இரு பிரதிகளில் (மூலம், பிரதி) பூரணப்படுத்தி **தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்னும் முகவரிக்கு **2026.01.30**ம் திகதி **மு.ப 10.00** மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்வி பிணை வைப்புத் தொகையினை **தலைவர், பிரதேச பெறுகைக் குழு, நல்லூர் பிரதேசசபை** என்ற பெயரில் கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியிலோ அல்லது நல்லூர் பிரதேச சபையிலோ செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் **2026.01.23** ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் **மு. ப. 10.00** மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | From 2026.01.16 - 2026.01.29 | | | |
| | | Pre – Bid Conference | | | At 10.00 A.M On 2026.01.23 | | | |
| | | Closing and Opening of Bid | | | At 10.00A.M on 2026.01.30 | | | |
| | | | | | | | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
| தொ.இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1 | NPS/2026/CF-I /Thi Jun | Improvements to Kalviyankadu Kokuvil Road (Thirunelvely Junction Area) | 19.92 | 84 Days | C6 & C5 (Road) | 77 Days | 298,800.00 | 2026.05.14 |

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்.**

(C-4817)

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 17.12.2025 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

## அமரர் கந்தசாமி ஆனந்தமூர்த்தி (வைகுந்தம்)

**(பிறப்பு இறப்பு விவாகப் பதிவாளர்)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (16.01.2026) வெள்ளிக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் காலை 8.30 மணியளவில் இடம்பெற்று தொடர்ந்து இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(C-4816)

நாகர்கோவில் மேற்கு,
நாகர்கோவில்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் வேலுப்பிள்ளை தெய்வானை

ஆண்டுகள் பத்து ஓடிவிட்டதம்மா
அள்ளித்தந்த அரவணைப்பு அகலவில்லை
அனைத்தும் ஆருயிர் நினைவுகளாய்
அன்றாடம் எங்களுடன் வாழும் தெய்வமம்மா

ஆசையுடன் குடும்ப குலவிளக்கேற்றி
ஆயிரம் உறவுகளுக்கு நிகராக நீங்களிருந்து
அனுதினம் பிரகாசிக்க நீங்கள் ஆற்றிய
அர்ப்பணிப்போ ஆயிரம் ஆயிரம்

அன்புடனும் பண்புடனும் பழக வழிகாட்டி
ஆனந்தமாய் எம்மை வாழ வைத்தாயம்மா
ஆழ்ந்த கவலையை சுமந்து இன்று
உங்கள் திதியை நினைவேந்துகின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(1922)

முகமாலை,
எழுதுமட்டுவாள்.

என்றென்றும் நீங்கா நினைவுகளுடன்
குருநாதன், ராசாத்தி குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மகளிர் பிரீமியர் லீக்

# குஜராத்தை வீழ்த்தியது மும்பை இந்தியன்ஸ்



மகளிர் பிரீமியர் லீக் ரி-20 கிரிக்கெட் போட்டியின் 6 ஆவது லீக் ஆட்டத்தில் குஜராத்-மும்பை அணிகள் மோதின. நாணய சுழற்சியில் வென்ற மும்பை அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 192 ஓட்டங்கள் குவித்தது.

இதில் அதிகபட்சமாக ஜார்ஜியா வேரம் 43 ஓட்டங்களும், பார்தி புல்மாலி 36 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதையடுத்து, 193 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை அணி களமிறங்கியது. அமன்ஜோத் கவுர் அதிரடியாக ஆடி 26 பந்தில் 40 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர்.

4 ஆவது விக்கெட்டுக்கு ஹர்மன் பிரீத் கவுருடன் நிகோலா கேரி இணைந்து பொறுப்புடன் ஆடி ஓட்டங்களைக் குவித்தார். கப்டன் ஹர்மன்பிரீத் கவுர் சிறப்பாக ஆடி அரை சதம் கடந்தார்.

இறுதியில், மும்பை அணி 19.3 ஓவரில் 193 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. இதன்மூலம் 7 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணி 2 ஆவது வெற்றியைப் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

# ஜூனியர் உலகக் கிண்ணம் இன்று ஆரம்பம்!




16 ஆவது ஐ.சி.சி. 19 வயதுக்குட்பட்டவருக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை ஜிம்பாப்வே, நமீபியா ஆகிய 2 நாடுகள் இணைந்து நடத்துகிறது.

இந்தப் போட்டி இன்று ஆரம்பமாகி பெப்ரவரி 7 ஆந் திகதி வரை இந்த போட்டி நடைபெறவுள்ளது.

இதில்16 நாடுகள் பங்கேற்கின்றன. அவை 4 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் அவுஸ்திரேலியா, இலங்கை, அயர்லாந்து, ஜப்பான் (ஏ பிரிவிலும்), இந்தியா, பங்களாதேஷ், நியூசிலாந்து, அமெரிக்கா (பி பிரிவிலும்), இங்கிலாந்து, பாகிஸ்தான், ஜிம்பாப்வே, ஸ்கொட்லாந்து (சி பிரிவிலும்), தென் ஆபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், ஆப்கானிஸ்தான், தன்சானியா (டி பிரிவிலும்) பங்கேற்கவுள்ளன.

ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் 4 பிரிவில் இருந்தும் முதல் 3 இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர் சிக்ஸ் சுற்றுக்கு முன்னேறும்.

இந்த சுற்றில் விளையாடும் 6 அணிகளும் 2 பிரிவாக பிரிக்கப்படும். இதன் முடிவில் 2 பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும்.

தொடக்க நாளில் 3 ஆட்டம் நடைபெறவுள்ளது. இதில் இந்திய அணி அமெரிக்காவை எதிர்கொள்கிறது. ஆயுஷ் மாத்ரே தலைமையிலான இந்திய அணி வெற்றியுடன் கணக்கை தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் போட்டி தொடரில் இந்திய அணி 5 முறை உலக கிண்ணத்தை வென்றுள்ளது.

இன்று நடைபெறும் மற்ற ஆட்டங்களில் ஜிம்பாப்வே - ஸ்கொட்லாந்து, மேற்கிந்திய தீவுகள் தன்சானியா அணிகள் மோதுகின்றன. (3)

# ஐ.சி.சி தரவரிசையில் முதலிடம் பிடித்த விராட் கோலி!




இந்தியா - தென் ஆபிரிக்கா கிரிக்கெட் அணிகள் இடையே 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற்றது. இதில் இந்திய அணி 2-1 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றி அசத்தியது.

இந்த தொடரில் 2 சதம் மற்றும் ஒரு அரைசதத்துடன் மொத்தம் 302 ஓட்டங்கள் குவித்து அசத்திய விராட் கோலி தொடர் நாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.

இதனையடுத்து நியூசிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் 93 ஓட்டங்கள் குவித்து ஆட்ட நாயகன் விருதை வென்றார்.

இந்நிலையில் ஒருநாள் போட்டியில் துடுப்பாட்ட வீரர்களுக்கான புதிய தரவரிசை பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது.

இதில் துடுப்பாட்ட தரவரிசையில் இந்திய வீரர் விராட் கோலி 785 புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்துள்ளார். கிட்டத்தட்ட 5 ஆண்டுகளுக்கு பிறகு ஒருநாள் பேட்டர்களுக்கான தரவரிசையில் கோலி முதலிடம் பிடித்துள்ளார்.

முதலிடத்தில் இருந்து ரோகித் 2 இடங்கள் சறுக்கி 3 ஆம் இடம் பிடித்துள்ளார். நியூசிலாந்து வீரர் டேரில் மிட்செல் 784 புள்ளிகளுடன் 2 ஆம் இடம் பிடித்துள்ளார். இப்ராஹிம் சத்ரன் 4 ஆவது இடத்திலும் சுப்மன் கில் 5 ஆவது இடத்திலும், ஷ்ரேயஸ் ஐயர் 10 ஆவது இடத்திலும் உள்ளனர். (3)

# இந்திய விசா மறுக்கப்பட்ட பாகிஸ்தான் வம்சாவளி வீரர்கள்

## பெரும் சிக்கலில் உலகக் கிண்ணம்




அமெரிக்க அணியைச் சேர்ந்த முன்னணி வேகப்பந்து வீச்சாளர் அலி கான் உள்ளிட்ட பாகிஸ்தான் வம்சாவளி வீரர்களுக்கு இந்தியா விசா வழங்க மறுத்துள்ளதால் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் பெரும் சிக்கல் எழுந்துள்ளது.

பாகிஸ்தான் வம்சாவளி வீரர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டால், ஸிம்பாப்வே அணி போட்டிகளை புறக்கணிக்கும் என்று அந்நாட்டு கிரிக்கெட் சபை எச்சரித்துள்ளது.

இதேவேளை ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்காக இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளப்போவதில்லை என்ற விடயத்தில் தாம் உறுதியாக உள்ளதாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இந்த விசா தொடர்பான மோதல்கள் மற்றும் அரசியல் பதற்றங்கள் வரவிருக்கும் ரி-20 உலகக் கிண்ண தொடரின் சுமூகமான போக்கை கேள்விக்குறியாக்கியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ரி-20 உலகக் கிண்ணம், இந்தியா மற்றும் இலங்கையில், எதிர்வரும் பெப்ரவரி 7 ஆம் திகதி முதல் மார்ச் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா - ஈரான் வர்த்தகப்போர்

# மீண்டும் சிக்கலில் சிக்கும் இலங்கை



**(கொழும்பு)**

**ஈரானுடன் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டுள்ள நாடுகள், அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யும் போது 25 சதவீத மேலதிக வரியைச் செலுத்த வேண்டும் என ட்ரம்ப் அறிவித்துள்ளார்.**

இலங்கையின் பிரதான ஏற்றுமதியில் ஒன்றான தேயிலையைக் கொள்வனவு செய்யும் முதல் பத்து நாடுகளில், ஈரானும் ஒன்றாக உள்ளது.

மாதாந்தம் சுமார் 9,800 மெட்ரிக் தொன் தேயிலை ஈரானுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. அதேநேரம், இலங்கை ஏற்றுமதியின் மிகப் பெரிய சந்தையாக அமெரிக்கா திகழ்கின்றது.

இதன்படி, மொத்த ஏற்றுமதியில் 25 சதவீத பங்கைக் கொண்டுள்ள அமெரிக்கா மூலம், ஆண்டொன்றுக்கு சுமார் 3 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைக்கின்றது.

இந்தநிலையில் "ஈரானுடன் வணிகம் செய்யும் எந்தவொரு நாடும், அமெரிக்காவுடனான அனைத்து வர்த்தகங்களுக்கும் 25 சதவீத வரியைச் செலுத்த வேண்டியிருக்கும்" என ட்ரம்ப் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

ஏற்கனவே இலங்கை பொருட்கள் மீது 20 சதவீத வரி அமெரிக்காவினால் விதிக்கப்பட்டுள்ளது.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள மேலதிக 25 சதவீத வரி அமுல்படுத்தப்பட்டால், அமெரிக்க நுகர்வோருக்கு இலங்கை பொருட்களின் விலை கணிசமாக உயரும்.

இது இலங்கையின் ஏற்றுமதி வருவாயைக் குறைப்பதோடு, உலக சந்தையில் இலங்கை பொருட்களின் போட்டித் தன்மையையும் பாதிக்கும் என "அருதா" ஆய்வு நிறுவனம் எச்சரித்துள்ளது. (8)

# தைப்பொங்கலை முன்னிட்டு விசேட போக்குவரத்து சேவை



(கொழும்பு)

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பொது மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு எளிதாகச் செல்வதற்காக .சிறப்பு போக்குவரத்து ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஆகியவை இணைந்து மேலதிக பேருந்து சேவைகளை பல முக்கிய நகரங்களுக்கு இடையே இயக்கி வருகின்றன.

குறிப்பாக ஹட்டன், நுவரெலியா மற்றும் பதுளை போன்ற இடங்களுக்குச் செல்லும் பயணிகளின் வசதிக்காக கூடுதல் வாகனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும் பயணிகளின் பயணத்தை இலகுபடுத்தவும் இந்தத் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (8)

# அதிவேக வீதியில் பயணிக்கும் சாரதிகள் அவதானம்

(கொழும்பு)

தற்போது நிலவும் கடும் மூடுபனி காரணமாக, அதிவேக வீதிகளைப் பயன்படுத்தும் சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது.

வாகனங்களின் முகப்பு விளக்குகளை ஒளிரவிட்டவாறும், ஏனைய வாகனங்களுக்கு இடையில் போதிய இடைவெளியைப் பேணியவாறும், கட்டுப்பாட்டு வேகத்தில் வாகனங்களைச் செலுத்துமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபை சாரதிகளை மேலும் கேட்டுக் கொண்டுள்ளது. (8)



தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தில் கந்தபுராணம் பாகம் ஐந்து மகேந்திரகாண்டம் உரையுடன் வெளியிடப்பட்டது. செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்ற விழாவில் முதற்பிரதியை சிவஸ்ரீ செந்தில்ராஜக்குருக்கள் பெற்றுக்கொண்டார்.

அவுஸ்திரேலியா உலகசைவப் பேரவையின் நிதி உதவியில் கந்தபுராணம் முழுவதும் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் ஹருணி அமரசூரிய சுவிட்சர்லாந்து விஜயம்



(கொழும்பு)

உலகப் பொருளாதார மன்றத்தின் மாநாடு எதிர்வரும் 19ஆம் திகதி சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் ஆரம்பமாகி, 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த உயர்மட்ட சர்வதேச மாநாட்டில் இலங்கை சார்பில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பங்கேற்கவுள்ளார்.

பிரதமருடன் இணைந்து பிரதி நிதிஅமைச்சர் அனில் ஜெயந்த பெர்னாண்டோவும், வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரிகளும் அங்கு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

# இருள் இருந்தால் ஒளி பிறந்தே தீரும்

# சவால்களை வென்று

## வளமான நாட்டை உருவாக்க ஒன்றிணைவோம்

## தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

டித்வா புயலினால் நாம் சந்தித்த மிகப் பாரிய இயற்கை அனர்த்தத்தைத் தொடர்ந்து, ஒரு தேசமாக மீண்டெழும் நம்பிக்கையுடனும் அயராத முயற்சிமற்றும் உறுதியுடனும், இதுவரை இல்லாத அளவிலான பாரிய புனரமைப்பு செயற்பாட்டில் நாம் ஒன்றாக கைகோர்த்துள்ளோம். அந்த வேலைத்திட்டத்துடன் மென் மேலும் வலுவாக கைகோர்க்க முன்வருமாறு சுபீட்சமான எதிர்பார்ப்புடன் இந்தத் தைப் பொங்கல் திருநாளில், நான் அனைவரிடமும் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தமிழர் திருநாளாகிய தைப் பொங்கல் வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெற்றிகரமான விளைச்சலுக்கு உதவிய சூரியக் கடவுளுக்கும், கால்நடைகளுக்கும், இயற்கை அன்னைக்கும், நன்றி உணர்வை எடுத்தியம்பும் கொண்டாட்டமாக தைப்பொங்கல் தினம் அமைகின்றது.

செழிப்பு மற்றும் நன்றியுணர்வை அடையாளப்படுத்தும் தைப்பொங்கல் பண்டிகை, சிறந்த விளைச்சலுக்கு நன்றி பாராட்டும் ஒரு நிகழ்வு மாத்திரமன்றி, எதிர்காலத்தில் தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் ஒரு புதிய பயணத்தைத் தொடங்குவதற்கான அழைப்பாகவும் அமைகிறது.

இயற்கையுடன் நெருக்கமாக இருக்க வேண்டிய அவசியம் முன்னெப்போதையும் விட அதிகமாக உணரப்படும் இந்த நேரத்தில், இயற்கையுடன் ஆழமாக இணைக்கப்பட்ட தைப் பொங்கல் பண்டிகை, நமது வாழ்க்கைக்கும் சமூகத்திற்கும் உயர்வான அர்த்தத்தைச் சேர்க்கிறது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

எந்தவொரு இருளுக்கும் பிறகு ஒளிபிறக்கும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம். உறுதியுடனும் ஒற்றுமையுடனும் சவால்களை வென்று "வளமான நாடு- அழகான வாழ்க்கையை" கட்டியெழுப்புவதற்கான பயணத்திற்கு இவ்வருட தைப்பொங்கல் பண்டிகை சிறந்த ஆசிர்வாதமாக அமைய பிரார்த்திக்கிறேன்.

இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள அனைத்து தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியான தைப்பொங்கல் தின வாழ்த்துகள் என அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணங்களால் நிரம்பி வழியும் ஈரான்

## தொடர்ந்து போராடுங்கள் - ட்ரம்ப்



(வோஷிங்டன்)......................

**ஈரானில் ஆட்சியாளர்களுக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2571 ஆக அதிகரித்துள்ள நிலையில் போராட்டக்காரர்களை தங்கள் போராட்டங்களைத் தொடருமாறு அழைப்பு விடுத்துள்ளார்.**

இது குறித்து ட்ரம்ப் தனது 'ட்ரூத் சோஷியல்' தளத்தில் ஒரு பதிவை வெளியிட்டுள்ளார். அதில் அவர் தெரிவித்துள்ளதாவது.

ஈரானிய தேசபக்தர்களே, தொடர்ந்து போராடுங்கள் - உங்கள் நிறுவனங்களைக் கைப்பற்றுங்கள்! கொலைகாரர்கள் மற்றும் சித்திரவதை செய்பவர்களின் பெயர்களைச் சேமித்து வையுங்கள். அவர்கள் மிகப்பெரிய விலையைக் கொடுப்பார்கள்.

போராட்டக்காரர்களின் கொலைகள் நிறுத்தப்படும் வரை, ஈரானிய அதிகாரிகளுடனான அனைத்து சந்திப்புகளையும் நான் ரத்து செய்துள்ளேன். உதவி வந்து கொண்டிருக்கிறது." எனக் குறிப்பிட்டுள்ளார்.

டிசெம்பர் இறுதி வரை பலி எண்ணிக்கை 20 என்ற அளவில் இருந்தது. அதன் பின், படிப்படியாக உயர்ந்து ஜனவரி முதல் வாரத்தில் பலி எண்ணிக்கை, 50ஐ கடந்தது.



தற்போதைய நிலவரப்படி உயிரிழப்புகள் மிகப்பெரிய அளவுக்கு உயர்ந்து 2,571 ஆக அதிகரித்துள்ளது.

இந் நிலையில் ட்ரம்ப் தொடர் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருப்பது சர்வதேச அளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (3)

## டிஜிட்டல் மயமாக்கப்பட்ட பிரித்தானிய விசா நடைமுறைகள்



(லண்டன்)

பிரித்தானியாவுக்குப் பயணம் செய்யத் திட்டமிடுபவர்களுக்கு அந்த நாட்டு அரசாங்கம் மிக முக்கியமான அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

குடிவரவு நடைமுறைகளை எளிமைப்படுத்தும் நோக்கில், பாரம்பரிய விசா ஸ்டிக்கர் முறையை நீக்கி, முழுமையான டிஜிட்டல் மயமாக்கப்பட்ட 'eVisa' முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவின் விசா மற்றும் குடிவரவு திணைக்களம் (UKVI), தனது சேவைகளை முழுமையாக டிஜிட்டல் மயமாக்கும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளது.

இதன் மூலம், கடவுச்சீட்டில் ஒட்டப்படும் காகித வடிவிலான விசா ஸ்டிக்கர்களுக்குப் பதிலாக, ஒருவரின் அடையாளத்தையும் குடிவரவு நிலையையும் உறுதிப்படுத்த மின்னணு முறையிலான 'eVisa' பயன்படுத்தப்படும்.

2026 ஜனவரி 12 முதல் விசா பெற்ற பலருக்கு, பாதுகாப்புக் கருதி eVisa மற்றும் விசா ஸ்டிக்கர் ஆகிய இரண்டுமே வழங்கப்பட்டு வருகின்றன.

2026 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், விசா ஸ்டிக்கர்கள் வழங்கும் நடைமுறையை முழுமையாக நிறுத்த பிரித்தானிய குடிவரவு திணைக்களம் முடிவு செய்துள்ளது. இந்த டிஜிட்டல் முறை அறிமுகமாவதன் மூலம், விசா ஆவணங்கள் தொலைந்து போவது அல்லது சேதமடைவது போன்ற சிக்கல்கள் தவிர்க்கப்படும்.

பிரித்தானியாவின் இந்த அதிரடி மாற்றமானது, சர்வதேசப் பயணிகளின் எல்லைக் கட்டுப்பாட்டுச் சோதனைகளை வேகப்படுத்தவும், போலியான ஆவணப் பயன்பாடுகளைத் தடுக்கவும் உதவும் என எதிர்பார்க்கப் படுவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (3)

## தென்கொரிய முன்னாள் ஜனாதிபதிக்கு மரண தண்டனை விதிக்குமாறு கோரிக்கை

(சியோல்)

தென் கொரிய நாட்டின் முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் இயோலுக்கு மரண தண்டனை விதிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தென் கொரிய அரசு சட்டத்தரணிகளால் அந்த நாட்டு நீதிமன்றத்தில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதிகார துஷ்பிரயோகம், தேசத்துரோகம் மற்றும் ஜனநாயக அமைப்புகளைச் சீர்குலைக்க முயற்சித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் தென் கொரிய முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் மீது சுமத்தப்பட்டுள்ளன.

சர்வாதிகார ஆட்சியை நிலைநிறுத்த அவர் முயற்சித்ததாகவும் சட்டத்தரணிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த வழக்கின் இறுதித் தீர்ப்பு எதிர்வரும் பெப்ரவரி



மாதம் 19 திகதி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (3)

## தாய்லாந்தில் தொடருந்து விபத்து

### ◆22 பேர் உயிரிழப்பு
### ◆55 பேர் படுகாயம்



(பேங்கொக்)

தாய்லாந்தில் தொடருந்து ஒன்றின் மீது கட்டுமான கிரேன் விழுந்ததில் குறைந்தது 22 பேர் உயிரிழந்துள்ளதுடன் 55 பேர் வரை படுகாயமடைந்துள்ளனர்.

சம்பவம் நடந்த நேரத்தில் 195 பயணிகளை ஏற்றிச் சென்ற தொடருந்து, பேங்கொக்கிலிருந்து புறப்பட்டு நாட்டின் வடகிழக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்துள்ளது.

நேற்று காலை 10 மணியளவில் அதிவேக, தொழில்நுட்பம் கொண்ட தொடருந்து பாதையை அமைக்கப் பயன்படுத்தப்படும் கட்டுமான கிரேன் ஒன்று குறித்த தொடருந்து பெட்டிகள் மீது விழுந்துள்ளது.

இந்த விபத்தின் விளைவாக தொடருந்து தடம் புரண்டு தீப்பிடித்ததாக உள்ளூர் அதிகாரிகளின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐம்பது வீதம் வரி அறவீடு; தேங்கிக் கிடக்கும் வாகனங்கள்

**(கொழும்பு) ..................................................**
**வாகனத்தின் உண்மையான விலையை விட மூன்று மடங்கு அதிகமான வரியைச் செலுத்துமாறு சுங்கத் திணைக்களம் கோருவதாக வாகன இறக்குமதியாளர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.**



இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய வரித் திருத்தங்கள் மற்றும் மேலதிக தண்டப்பணங்கள் காரணமாக ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் கடந்த ஆறு மாதங்களாக விடுவிக்கப்படாமல் தேங்கிக் கிடப்பதாக பாதிக்கப்பட்ட வாகன உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கருத்து வெளியிட்ட சுங்கத் திணைக்களப் பேச்சாளர் சந்தன புஞ்சிஹேவா,

இந்த வாகனங்கள் தற்போது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள எல்லை தாண்டிய கடன் கடிதங்கள் தொடர்பான வழக்குடன் தொடர்புடையவை என்றும் தற்போது உரிமையாளர்களுக்கு இரண்டு தெரிவுகள் வழங்கப்பட்டுள்ளன.

சாதாரண வரியைச் செலுத்தி வாகனத்தை வீட்டிற்கு எடுத்துச் செல்லலாம். ஆனால், நீதிமன்ற வழக்கு முடியும் வரை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் வாகனத்தைப் பதிவு செய்ய முடியாது. விதிமுறைகளை மீறியதற்கான தண்டப்பணத்தைச் செலுத்தி, உடனடியாக வாகனத்தைப் பதிவு செய்துகொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (க-8)












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு நிறைவும் விருது வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

சுதந்திர மனித உரிமைகள் அமைப்பின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் விருது வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை கண்டி குண்டசாலையில் உள்ள மத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் நடை பெறவுள்ளது.

இதில் மாவட்ட ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளனர். கலாபூஷணம் ஜோசப் பாலாவின் "மௌனத் தழும்புகள்" என்ற சிறுகதை தொகுப்பும் அன்றைய தினம் அரங்கில் அறிமுகம் செய்து வைக்கப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

# பாடசாலை மாணவர்களுக்கு 6000 ரூபா கொடுப்பனவு

(கொழும்பு)

**அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் கீழ் உள்ள குடும்பங்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக, ஒரு பிள்ளைக்கு 6 ஆயிரம் ரூபாய் வீதம் கொடுப்பனவு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

அஸ்வெசும திட்டத்திலுள்ள குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், நலன்புரி நன்மைகள் சபை ஊடாக இக்கொடுப்பனவைப் பெறுவர்.

அத்துடன் அஸ்வெசுமவில் உள்வாங்கப்படாத, 300 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களும், பிரிவெனாக்கள் மற்றும் துறவுப் பெண்கள் ஆச்சிரமங்களில் கல்வி பயில்கின்ற மாணவர்கள், துறவு மாணவர்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் தங்கியிருந்து பாடசாலை செல்லும் மாணவர்கள் ஆகியோரும் குறித்த கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள தகுதியுடையவர்களாவர்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை தனது அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. (8)

## புதிய அதிபர் நியமனம்




(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் புதிய அதிபராக சிவஞானபோதம் தனஞ்சயன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் குறித்த பாடசாலையில் ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் கடமையாற்றியிருந்தார்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கு அளப்பரிய பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (8-104)









உழவர் திருநாளாம் தைப்பொங்கல் தினத்தை கொண்டாடுவதற்கு மக்கள் தயாராகி வரும் நிலையில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும் பொங்கல் வியாபாரம் களைகட்டியுள்ளது. கடந்த வருடத்தினை விட இம்முறை மக்கள் அதிக ஆர்வத்துடன் பொங்கல் பொருட்களைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டி வருவதனைக் காணக்கூடியதாக இருந்தது.

(படங்கள்:சிவசாந்தன், வசந்தரூபன்)

## சைவபரிபாலன சபை பரீட்சைகள் ஜனவரி 24 நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்ட வெள்ள பேரிடரால் மாணவர்களின் இயல்பு நிலை சீரின்மை காரணமாக ஒத்திவைக்கப்பட்ட சைவ பரிபாலன சபையின் சமயம், தமிழ்மொழி பாட பரீட்சைகள் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை நடை பெறவுள்ளது.

பரீட்சைக்கு உரிய பரீட் சார்த்திகளின் சுட்டிலக்கங்கள் மற்றும் பாடத்திற்குரிய நேர சூசிகள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும் பரீட்சைகளுக்கு பாடசாலை ஊடாக விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் உரிய பாடங்களுக்கு அதே பாட சாலையில் பரீட்சைகளுக்கு தோற்றுமாறு வேண்டுகிறோம்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 7678 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை செயலாளர் அறிவித்துள்ளார். (8)

## நாகர்கோவில் பகுதியில் கஞ்சா மீட்பு



(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணத்தில் பெருமளவிலான கேரளாக் கஞ்சா பொதிகள் பற்றைக்காட்டிற்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

யாழ். வடமராட்சி கிழக்கு, நாகர் கோவில் பகுதியில் கஞ்சா போதைப்பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடி படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த இடத்திற்கு விரைந்த அதிரடி படையினர் போதைப்பொருட்களை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட போதைப் பொருட்கள் ஒவ்வொன்றும் சுமார் 1.4 கிலோ கிராம் எடையுடைய பொதிகளாக பொதியிட்டப்பட்டிருந்ததாகவும் அவ்வாறு பொதியிடப்பட்ட 9 பொதிகளை கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில் மீட்கப்பட்ட போதைப்பொருட்களை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக மருதங்கேணி பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (8-33)

## அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் தே.ம.ச.அலுவலகத்திற்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்கும் இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் மேத்யூ டக்வொர்த் நேற்றைய தினம் புதன்கிழமை யாழில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் அலுவலகத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

அங்கு கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். பவானந்தராசா, ஜெ.ரஜீவன், க.இளங்குமரன் மற்றும் யாழ். மாநகர சபை உறுப்பினர் எஸ். கபிலன் ஆகியோர் அடங்கிய குழுவினரை சந்தித்து கலந்துரையாடினார். (8-33)

## இந்தியாவில் இருந்து இலங்கைக்கு புறாக்கள் கடத்திய மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு புறாக்களை கடத்தி வந்த நெடுந்தீவை சேர்ந்த மூன்று இளைஞர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தியாவில் இருந்து கூடுகளில் புறாக்களை அடைத்து நெடுந்தீவுக்கு படகில் கடத்தி வந்த இளைஞர்கள் தொடர்பில் நெடுந்தீவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் புறாக்களை கடத்தி வந்த மூன்று இளைஞர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன் அவர்களால் கடத்தி வரப்பட்ட புறாக்களையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களை நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்!

## அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

**எதிர்வரும் ஏப்ரல் மாதம் அளவில் நாட்டில் பச்சை அரிசி மற்றும் நாடு அரிசிக்கு கடும் பற்றாக்குறை உருவாகும் அபாயம் இருப்பதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.**

மரதகமுல சிறு மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

சம்பா மற்றும் கீரி சம்பா அரிசி விலைகள் மேலும் உயரக்கூடும் என அந்த சங்கத்தின் தலைவர் பி.கே.ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

தற்போது மரதகமுல சந்தையில் முதல் தர 'நாடு' அரிசி ஒரு கிலோவின் மொத்த விற்பனை விலை அதிகபட்சம் 225 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

சிவப்பு பச்சை அரிசி 208 ரூபா முதல் 212 ரூபா வரை, சிவப்பு அரிசி வகைகள் 205 ரூபா முதல் 210 ரூபா வரை காணப்படுகின்றன.

ஆனால் சம்பா மற்றும் கீரி சம்பா அரிசிகள் மிகவும் அதிக விலையில் உள்ளன. கீரி சம்பா ஒரு கிலோ 340 ரூபாவை தாண்டியுள்ளது. சம்பா 260 ரூபாவை கடந்துள்ளது.

சம்பா மற்றும் கீரி சம்பா அரிசி விலைகள் உயர்ந்தவுடன், அந்த அரிசிகளை சந்தையில் அதிகமாக வெளியிடும் போது, சிவப்பு பச்சை மற்றும் நாடு அரிசிகளுக்கு பெரிய பற்றாக்குறை உருவாகும். இதனால் நெல் விலையும் உயரும் நிலை ஏற்படும் என தெரிவித்துள்ளார்.

எனவே நெல் விலை உயர்த்தப்படுமானால், இந்த மூன்று வகை அரிசிகளுக்கும் விவசாயிகளுக்கு நியாயமான விலை வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (8)

# பொங்கல்பொருட்கள் வழங்கல்

(கிளிநொச்சி)

தைத் திருநாளை முன்னிட்டு இந்திய அரசினால் பொங்கல் பானை மற்றும் பொங்கலுக்குரிய பொருட்கள் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சியில் கடந்த 13 ஆம் திகதி நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதேச செயலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 200 குடும்பங்களுக்கு பொங்கல் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தின் கொன்சியூலர் ஜெனரல் சாய்முரளி உள்ளிட்ட குழுவினர் கிளிநொச்சி மாவட்டச்செயலகத்திற்கு வருகை தந்து பொங்கலுக்குரிய பொருட்களை நேரடியாக பொதுமக்களுக்கு வழங்கிவைத்தனர். (8-33)



தொல்பொருள் திணைக்களம் மற்றும் வட மாகாண சுற்றுலாத்துறை பணியகம் என்பன இணைந்து பருத்தித்துறையில் பாரம் பரிய சின்னங்கள் அமைந்துள்ள இடங்களில் மும்மொழிகளிலும் வரலாற்று தகவல்கள் அடங்கிய அறிவித்தல் பலகைகளை கடந்த ஞாயிற்றுக் கிழமை நாட்டி வைத்தன.

(படம்-மகாலிங்கம்)

# மாணவர்களுக்கான சீருடை

## சீன அரசாங்கத்தால் வழங்கி வைப்பு

(கொழும்பு)

சீன அரசாங்கத்தினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 2026 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடை துணிகளை உத்தியோகப்பூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை கொழும்பு துறைமுக வளாகத்தில் நடைபெற்றது.

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் சீருடைத் துணிகளைப் பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் கையளித்தார்.

எதிர்வரும் ஜனவரி 19 முதல் நாடு முழுவதும் உள்ள வலயக் கல்வி அலுவலகங்களுக்கு இந்த சீருடைத் துணிகளை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)

# கோப்பாய் மாவீரர் துயிலுமில்ல காணி மாவீரர் அஞ்சலிக்காக விடுவிக்க வேண்டும்

## தவிசாளர் நிரோஷ் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்ல காணி இராணுவத்திற்கு கையளிப்புச் செய்யப்பட்டுள்ளது என்ற தகவல் பிரதேச அபிவிருத்திக் குழுவில் காட்சிப் படுத்தப்பட்ட நிலையில், இராணுவம் அங்கு முகாமிட்டிருப்பது உரிமை மீறலாகும். உறவுகள் அஞ்சலிப்பதற்கான உரிமையினை உறுதிப்படுத்தும் வகையில் அக் காணியினை விடுவிக்க அபிவிருத்திக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் வலியுறுத்தினார்.

கோப்பாய் மாவீரர் துயிலுமில்லக்காணி படையினருக்கு வழங்கப்பட்டுள்ளது என கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற கோப்பாய் பிரதேச அபிவிருத் திக் குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப் பட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவீரர் துயிலும் இல்ல காணி இராணுவத்தினருக்கு கையளிப்புச் செய்யப்பட்டுள்ளது என்ற தகவலை நாம் புதிதாக தற்போதே கேள்விப்படுகின்றோம். அது முன்னைய காலங்களில் இடம் பெற்றதாக தங்களால் வெளிப்படுத்தப்படுகிறது. இந்த இரகசிய தகவலை நாம் அறியும் நிலையில், நாம் அதனை கடுமையாக எதிர்க்கின்றோம். துயிலும் இல்லத்தில் எமது உறவுகளின் வித்துடல்கள் விதைக்கப்பட்டிருக்கின்றன.

அங்கு மரணித்தவர்களை நினைவு கொள்ளும் உரிமை, அஞ்சலிக்கும் உரிமை எமது உறவுகளுக்கு கிட்ட வேண்டும்.

இங்கு உத்தியோகத்தர்களால் வெளியிடப்படும் தகவல்களின் அடிப்படையில் துயிலும் இல்ல காணி தொடர்பில் பல மாற்றங்கள் வெளித்தெரியாது நடந்துள்ளன. விரைவில் துயிலும் இல்லங்கள் விடுவிக்கப்படவேண்டும். அதற்கு வசதியாக அபிவிருத்திக் குழுக்களில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என வலியு


அன்பர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும்
இனிய தைப்பொங்கல்
நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்



இஞ்சரிங்கோ, இஞ்சரிங்கோ இவளை என்னவென்று கேளுங்கோ? என்ன பிள்ளை அம்மாவுடன் ஏன் விவாதம்?
அப்பா என்னுடைய கல்யாணத்தை அண்ணாமலையான் Wedding hall இல் தான் வையுங்கோ (ASR WEDDING HALL) புதுப் பொலிவுடன் மெருகேற்றப்பட்டுள்ளது.
என்ர தங்கம் Phone ஐ போடு அண்ணாமலையானுக்கு
இந்திய திரைப்படங்களை படமாக்குவதற்கு சிறந்த மண்டபம், திருக்கல்யாணம், பூப்புனித நீராட்டு விழா, கிறிஸ்தவ பதிவுத் திருமணங்கள், முஸ்லீம் நிக்ஹா [திருமணங்கள்] ஏனைய வைபவங்களையும் நடத்துவதற்கு நாடுங்கள் அண்ணாமலையான்



ஸ்ரீ ராகவேந்திரர் கல்யாண மண்டபம்.
இல.542 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 1355 , 076 744 6064
(8402)



31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 12.02.1955
மறைவு 17.12.2025

அமரர்
கந்தசாமி ஆனந்தமூர்த்தி
[குடத்தனை பிறப்பு, இறப்பு பிரிவு மற்றும் வடமராட்சி கிழக்கு விவாகப் பதிவாளர்]

யாழ் மாவட்ட விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் சங்கத்தின் அங்கத்தவராக இருந்து மக்களுக்கான சிறந்த சேவையினை ஆற்றி அண்மையில் இறைபதம் அடைந்த அமரர் கந்தசாமி ஆனந்தமூர்த்தி அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

விவாக,பிறப்பு,இறப்பு பதிவாளர் சங்கத்தினர்.
(C-4814)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 955





பரிகசித்துச் சிரிப்பதற்குக் கூட விடயம் கிடைப்பதில்லை!" என்றாள்.

"ஆம், அக்கா! நாம் கூட வேட்டைக்குப் போயிருக்கலாம். எனக்கு வேட்டை பார்க்கப் பிரியம் அதிகம்.

என் தந்தையோடும் தமையனோடும் சில சமயம் போவதுண்டு. ஆனால் இன்றைக்கு என்னமோ கந்தமாறன் பிடிவாதமாகத் தடை செய்துவிட்டான். ஒருவேளை உங்களுக்கு வேட்டை பிடிக்காது என்று அவ்விதம் தடை செய்தானோ, என்னமோ?" என்றாள் மணிமேகலை. "ஆமாம் எனக்கு வேட்டை அவ்வளவாகப் பிடிப்பதில்லைதான். இரத்தத்தைக் கண்டாலே எனக்குத் திகிலாயிருக்கும்.

ஆனால் கந்தமாறன் அதற்காகச் சொல்லவில்லையடி! உன்னையும் உன் வீட்டு விருந்தாளிகளில் ஒருவரையும் பிரித்து வைப்பதற்காகவே அவ்விதம் அவன் தடை செய்துவிட்டான்!" என்றாள்.

மணிமேகலையின் கன்னங்களில் சுழிகள் காணப்பட்டன. சிறிது நேரம் தரையைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, "புருஷர்கள் எங்கேயாவது போய்த் தொலையட்டும், அக்கா! அவர்கள் சகவாசமே நமக்கு வேண்டாம். நாம் ஏரிக்கரை நீராழி மண்டபத்துக்குப் போய் நீர் விளையாடி விட்டு வரலாம்! வருகிறீர்களா?" என்றாள். நந்தினியும் அதற்குச் சம்மதிக்கவே தந்தையிடம் சொல்லி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மணிமேகலை செய்தாள்.

வீரநாராயண ஏரியின் கீழ்ப்புறத்தில் பெரிய கரையும் அதில் எழுபத்து நாலு மடவாய்களும் உண்டு என்பதைப் பார்த்திருக்கிறோமல்லவா? ஏரியின் மேற்புறத் தில் அத்தகைய பெரிய கரை கிடையாது.

ஏரி நீரின் ஆழம் சிறிது சிறிதாகக் குறைந்து வந்து ஏரிக்கரை அங்கே சம தரையாக அமைந்திருந்தது. இன்னும் மேற்கே அடர்ந்த காடுகள் மண்டிக் கிடந்தன.

இவ்விதம் ஏரி நீர் குறைந்து சம தரையாகும் பிரதேசத்தில் ஆங்காங்கே சிறிய தீவுகள் காணப்பட்டன. தீவுகளில் மரங்களும் செடி கொடிகளும் அடர்ந்து வளர்ந்திருந்தன. அத்தீவுகளில் ஒன்றின் கரையில் படித்துறையும் நீராழி மண்டபமும் அமைக் கப்பட்டிருந்தன.

இங்கே கடம்பூர் சம்புவரையரின் அந்தப்புரத்துப் பெண்கள் நீராடுவதற்காகவும் உல்லாசமாகப் பொழுதுபோக்குவதற்காகவும் வருவது வழக்கம்.

அந்த இடத்துக்கு வந்து சேர வேண்டுமானால் இரண்டு காததூரம் ஏரியைச் சுற்றிக் கொண்டு வரவேண்டும். இதனாலும் சம்புவரையர் வீட்டுப் பெண்கள் குளிக்குமிடம் என்று தெரிந்தபடியாலும் அந்நிய மனிதர்கள் அங்கே வருவது கிடையாது.


நந்தினியும் மணிமேகலையும் படகிலேறிக் கொண்டு அந்தத் தீவுக்கு இப்போது வந்து சேர்ந்தார்கள். படகு செலுத்தத் தெரிந்த இரண்டு தோழிமார்கள் உடன் வந்தார்கள்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



## வாரம் இரண்டு; வரம் இருபது!



ஒரு துறவியிடம் வந்த சிறுவன் ஒருவன் "எல்லாருடைய விருப்பத்தையும் கடவுளால் நிறைவேற்ற முடியாது போலத் தெரிகிறதே?" என்றான்.

"எதனால் அப்படிச் சொல்கிறாய்? என்று கேட்டார் துறவி.

"விறகுவெட்டி, குளிர் அடிக்க வேண்டுமென்று வேண்டுகிறான்" என்றான் அவன்.

"ஆமாம் அப்போதுதான் அவன் குளிர்காலத்தில் நிறைய விறகுகளை விற்க முடியும். அதனால் அப்படி வேண்டுகிறான்" என்றார் துறவி.

"ஆனால் பழ வியாபாரி மழையும் இருக்கக் கூடாது வெயிலும் காயக் கூடாது" என்று வேண்டுகிறான்.

"ஆமாம் அப்படி இருந்தால்தான் பழங்கள் கெடாமல் நீண்ட நாட்கள் இருக்கும்"

"உழவனோ மழை பெய்ய வேண்டும் என்று வேண்டுகிறான்.

ஆனால் செங்கல் சூளை போடுகிறவன் மழை வரக் கூடாது என்று வேண்டுகிறான். அதனால் கடவுளே நினைத்தால் கூட எல்லோருடைய வேண்டுதலையும் நிறைவேற்ற முடியாது என்று தெளிவாகிறதே" என்றான் அவன்.

"அது சரி இப்பொழுது வானிலை எப்படி உள்ளது? என்று கேட்டார் துறவி.

"வெம்மையாக உள்ளது."

"சென்ற வாரம் எப்படி இருந்தது?"

திங்கள், செவ்வாயில் மழை பெய்தது. வெள்ளிக்கிழமையன்று குளிராக இருந்தது" என்றான் சிறுவன்.

"பார்த்தாயா இந்த இரண்டு வாரத்திற்குள்ளேயே கடவுள் எல்லோருடைய விருப்பத்தையும் நிறைவேற்றி உள்ளார்" என்றார் துறவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைத் தலைவராக விமலேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவராக எஸ். விமலேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதம் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் அவர்களால் ஆளுநர் செயலகத்தில் வைத்து நேற்றைய தினம் வழங்கப்பட்டது.

இந் நிலையில் எதிர்வரும் 19 ஆம் திகதி அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-8)



துன்னாலை வடக்கு நவிட்டான்பதி மனோன்மணி சக்தி சமேத காளிகாம்பாள் தேவஸ்தான அலங்கார உற்சவம் கடந்த 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அபிஷேகத்துடன் ஆரம்பமாகியது.

(படம்:- மகாலிங்கம்)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1997- இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி-பா-20
உயரம்: 6"
தகைமை/தொழில்-BSC,London
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: B/16422

பிறப்பு:1994- இந்து
நட்சத்திரம்:பூசம்
உயரம்-5'8"
தகைமை/தொழில்-A/L,கட்டார்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16423

பிறப்பு:1970-இந்து
நட்சத்திரம்-உத்தரம்
கி-பா-65
உயரம்:5'6"
தகைமை/தொழில்-NCT, QS
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16424

பிறப்பு: 1990- இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி
கி-பா-15
உயரம்:6"
தகைமை/தொழில்-A/L,கமம்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16425

பிறப்பு: 1996- இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
12இல் சூரிசெவ்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: BSC,Instructor
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: B/16427

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்-கார்த்திகை
2இல்செவ்
கி-பா-6
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSC,Civil Engineer
எதிர்பார்ப்பு: Engineer, ITField
தொ.இ: G/16418

பிறப்பு-1985-இந்து
நட்சத்திரம்-உத்தராடம்
3இல்சூரிசெவ்
தகைமை/தொழில்: BSC,MSC, PHD, Assistant Professor(Canada)
எதிர்பார்ப்பு: பட்டதாரி, விவாகரத்தானவர்
தொ.இ: G/16426

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்-மிருகசீரிடம்
5இல்சூரிசெவ்
கி-பா-6 1/2
உயரம்-5'6"
தகைமை/தொழில்: BSC, Lecturer
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16429

பிறப்பு-1991-இந்து
நட்சத்திரம்:மூலம்
கி-பா- 44 1/2
உயரம்: 5'
தகைமை/தொழில் -O/L
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16434

பிறப்பு-2003- இந்து
நட்சத்திரம்-பூசம்
7இல்செவ்
கிபா-68
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு - படித்த தகுதியான ஆண்
தொ.இ: G/16437

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 521

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# தமிழ்

உலக நாடுகளை எல்லாம் சுற்றிப்பார்த்துவிட்டு வந்தார் ஒரு அன்பர். அவர் சொன்னார். ஐயா பிரான்ஸ் நாட்டின் கடைத் தெருவிலே நடக்கும்போது பிரான்ஸ் தெரிகிறது.

ஜேர்மனிய நாட்டின் கடைத்தெருவிலே நடக்கும்போது ஜேர்மனி தெரிகிறது. ரஷ்யா நாட்டின் கடைத்தெருவிலேநடக்கும்போது ரஷ்யா தெரிகிறது. தமிழ்நாட்டின் கடைத் தெரு விலே நடக்கும்போது தமிழ்நாடு தெரியவில்லை. இங்கிலாந்து தான் தெரிகிறதுஎன்றார்.

ஏன் அப்படிச் சொல்கின்றீர்கள் என்று கேட்டேன். எந்தப் பக்கம் திரும்பினாலும் ஆங்கிலத்திலே தானே பெயர் பலகைகள் கண்ணிலே படுகின்றது. தமிழிலே யாரும் எழுதி வைக்கிறதில்லையே என்றார். தலையைக் குனிந்துகொண்டேன். குனியாதீர்கள்.. நிமிருங்கள் என்றார் நிமிர்ந்தேன்.

அப்புறம் அவர் பேச ஆரம்பித்தார்.அமெரிக்காபோயிருந்தேன். நயாகரா நீர்வீழ்ச்சி பார்த்தேன். அங்கே முகப்பிலே நல்வரவு என்று எழுதியிருந்தது. இங்கே ஏன் தமிழிலே எழுதி வைத்திருக்கின்றீர்கள் என்று கேட்டேன்.

"உலகத்தின் முத்தமொழி" தமிழ்! உயர்ந்த மொழி தமிழ்! உலகத்தின் உயர்ந்த நீர்வீழ்ச்சி நயாகரா! அதனாலே அதை இங்கே எழுதி வைத்திருக்கின்றோம் என்றார்.

ஜப்பானிய பல்கலைக்கழக வாயில் முகப்பிலே "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்கிற சங்கத் தமிழ்ப்பாடல் வரியை மொழிபெயர்த்து எழுதி வைத்திருக்கிறார்களாம். ஜெருசலேம் நகரிலே உள்ள ஒலிவ மலையில் கிறிஸ்தவ கோயில் ஒன்றிலே இயேசு கற்பித்த வழிபாட்டுக் கருத்து உலகத்திலே உள்ள 68 மொழிகளிலே எழுதப்பட்டிருக்கிறது. அதிலே தமிழ் மொழி இடம் பெற்றிருக்கிறது.

புத்தர் தமிழ் படித்தார் என்று மிகப்பழைய வடமொழி நூல் "இலலித விசுதாரம்" தமிழைப் புகழ்ந்து பேசுகின்றது. என் கல்லறையில் "ஒரு தமிழ் படித்த மாணவன்" என எழுதி வையுங்கள் என்றார் போப். திருக்குறளைப் படிக்க நான் தமிழனாகப் பிறக்க விரும்புகிறேன் என்றார் இந்தியாவின் தந்தை காந்தியடிகள். இப்படி அவர் சொல்லிக்கொண்டே வந்தார்.

அது சரி. தமிழுக்கு வயசு என்ன தெரியுமா? என்றார். உடனே நான் "கல்தோன்றி மண் தோன்றா காலத்தே முன்தோன்றி என்று ஆரம்பித்து விட்டேன். உணர்ச்சிபூர்வமாக பேசாதீர்கள். அறிவு பூர்வமாகப் பேசுங்கள் என்றார். நான் அடங்கிப் போயிவிட்டேன்.

அப்புறம் சொன்னார்: தமிழின் தோற்றம் தோராயமாக கி.மு. 50,000... என தமிழ் வரலாறு என்கின்ற நூலிலே மொழியியல் அறிஞர் பாவாணர் குறிப்பிட்டிருக்கின்றார்.

இயேசு பிறப்பதற்கு 500 ஆண்டுகளுக்கு முன்னாடியே தொல்காப்பியம் என்கின்ற இலக்கண நூல் நம்மிடம் இருந்தது. இயேசு பிறந்து 500 ஆண்டுகளுக்குப் பிறகு தோன்றிய மொழியே ஆங்கிலம்.

தமிழ் மொழி உலக மொழிகளுக்கெல்லாம் தாய் மொழி. அது தோன்றிய இடம் குமரிக் கண்டம். அங்கேயிருந்துதான் பல நாடுகளுக்குப் போய்க் குடியேறினார்கள். மங்கோலிய சீன மொழிகளுக்கும் தமிழுக்கும் உறவு உண்டு-என்கின்றார் கால்டுவெல். இந்தோ ஐரோப்பிய மொழிகளும் தமிழும் நெருங்கியவை என்கின்றார் ஆங்கில அறிஞர் ஜி.யு. போப்.

ஹங்கேரி -துருக்கி -பின்னிசு - இது மாதிரி பதினொரு பின்னோ-உக்ரியன் மொழிகள் தமிழிலேயிருந்து பிறந்தவை என்கிறார் கறார் கபோர் சென்த் கொதல் நய். சுமேரிய மொழிக்கும் தமிழுக்கும் உள்ள உறவைச் சுட்டிக் காட்டுகிறார் லோகநாத முத்தரையர்.

எலாமைட் மொழிக்கும் தமிழுக்கும் தொடர்பு உண்டு என்கின்றார் மக் ஆல் பின் . கொரியன் மொழிக்கும் தமிழுக்கும் உள்ள உறவை விளக்கியிருகின்றார் ஆல்பர்ட். ஜப்பானிய மொழிக்குத் தமிழே மூலம்என்கின்றார் ஒனோ. ஆபிரிக்க மொழிகளுக்கும் தமிழுக்கும் உள்ள உறவை சொல்கிறார் செங்கோர். பாசுக்கு மொழி உலகளாவப் பரவிய பண்டைத் தமிழ் மொழியின் ஒரு கூறே என்கிறார் இலாகோவாரி. ஆஸ்திரேலியப் பழங்குடிகள் பேசிய மொழிகள் தமிழோடு கொண்டுள்ள உறவை அறியத் தருகிறார் சமன்லால்.

உலகம் சுற்றி வந்த நண்பர் இப்படி நிறைய செய்திகளைச் சொல்லிக் கொண்டே போனார்.அது சரி ஏன் இப்படி இதையெல்லாம் என்னிடம் சொல்கின்றீர்கள் என்று கேட்டேன். தமிழ் பேசுகின்றர்களுக்குத் தமிழ் மொழியைப் பற்றித் தெரிய வேண்டும் இல்லையா. அதற்காகத் தான் என்றார். என்னங்க இப்படிச் சொல்கின்றீர்கள். எங்களுக்குத் தமிழைப் பற்றி தெரியாதா? என்றேன். அது இருக்கட்டும். உங்களுக்கு 1330 திருக்குறளும் ஒழுங்காக தெரியுமா? என்று கேட்டார். நான் மறுபடியும் தலையைக் குனிந்து கொண்டேன். அவர் கேட்பதும் நியாயம்தான்!

அன்றைக்கு ஒருநாள் ஒரு சின்னப் பையனைப் பார்த்துக் கேட்டேன்.தம்பி உனக்கு எத்தனை திருக்குறள் தெரியும்?என்று. எனக்கு 3000 திருக்குறள் தெரியும்! என்றான். என்னப்பா மொத்தம் 1330 திருக்குறள் தானே. நீ 3000 தெரியும் என்கின்றாயே என்றேன். ஏன் சார் தமிழ் வளரவே கூடாதா? என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டான். இவனெல்லாம் எந்தக் காலத்திலே வளர்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்பர்சிட்டி...

பருத்தித்துறை இன்பர்சிட்டி கடற்கரையில் 40 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளதோடு இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் இராணுவத்தினர் மற்றும் பருத்தித்துறைப் பொலிஸார் குறித்த இருவரையும் கைது செய்துள்ளனர். (ம-7,60)

## நான்கு...

கட்டளையைப் பிறப்பித்திருந்தார்.

குறித்த வழக்கானது நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போது இரு தரப்பினராலும் சமர்ப்பணங்கள் முன்வைக்கப்பட்டன.

இந்நிலையில் சமாதானமான முறையில் குறித்த வழக்கினை முடிவுக்குக் கொண்டு வர முடியும் எனவும் அவ்வாறாயின் சட்டவிரோதக் கட்டுமானங்கள் அகற்றப்பட வேண்டும் எனவும் கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தின் சார்பாக முன்னிலையாகியிருந்த சட்டத்தரணிகளால் தெரிவிக்கப்பட்டபோது எதிர்த்தரப்பினர் அதற்கு இணங்கிக் கொள்ளாத நிலையில் குறித்த சட்டத்தின் கீழ் இடம்பெற்ற கைதுக்கு பிணை வழங்கும் அதிகாரம் தனக்கு இல்லை எனத் தெரிவித்து குறித்த எதிரிகளுக்கு பிணை வழங்க நீதிபதி மறுப்புத் தெரிவித்து எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பித்திருந்தார்.

குறித்த வழக்கில் எதிரிகளாக குறிப்பிடப்பட்டிருந்த 11 பேரில் 9 பேர் நேற்று (14) நீதிமன்றில் முன்னிலையாகியிருந்த நிலையில் அவர்கள் கைது செய்யப்பட்டு திருகோணமலை சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

திருகோணமலை கல்யாண வன்ச திஸ்ஸ தேரர், பலாங்கொட கஞ்சப தேரர், திருகோணமலை சுவித வன்ச திஸ்ஸ தேரர், நந்த தேரர் ஆகிய 4 பௌத்த பிக்குகள் உட்பட சிவில் சமூகத்தினர் ஐவருமாக ஒன்பது பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை பிரதான கடற்கரைக்கு அருகில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் 2025 நவம்பர் மாதம் 16ஆம் 17ஆம் திகதிகளில் கடலோரப் பாதுகாப்புக் கட்டளை சட்டத்தை மீறி சட்ட விரோதமான முறையில் புத்தர் சிலையை வைத்து மக்களிடையே குழப்பங்களை ஏற்படுத்தியதாகக் கடலோரப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் 28 (01) மற்றும் 14 (01) போன்ற சட்ட விதிகளுக்கு அமைவாக திருகோணமலை துறைமுகப் பொலிஸாரால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு 17.11.2025 அன்று திருகோணமலை துறைமுக பொலிஸாரால் திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த வழக்கானது 26.11.2025 அன்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிராளிகள் சார்பில் எவரும் முன்னிலையாகி இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ம-7)

## வட மாகாண...

"முழு நாடுமே ஒன்றாக" தேசிய வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு கடந்த 2025 ஒக்ரோபர் 30ஆம் திகதி கொழும்பு, சுகததாச உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றதுடன் அதன் தென் மாகாண நிகழ்வு 2025 நவம்பர் 20ஆம் திகதி தங்கல்லையில் இடம்பெற்றது.

தேசிய அச்சுறுத்தலாக மாறியுள்ள நச்சுப் போதைப்பொருட்களை ஒழிப்பதன் அவசியம் குறித்து வட மாகாண மக்களை அறிவுறுத்துவதும் "முழு நாடுமே ஒன்றாக" தேசிய வேலைத் திட்டத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற விசேட பணிகள் குறித்து தெளிவுபடுத்தி வட மாகாண மக்களினதும் அதனுடன் தொடர்பான ஏனைய தரப்பினரதும் பங்களிப்பினை இந்த திட்டத்திற்காக பெற்றுக் கொள்வதுமே நாளை 16ஆம் திகதி நடைபெறவுள்ள வட மாகாண வேலைத்திட்டத்தினால் எதிர்பார்க்கப்படுகின்றது.

நச்சுப் போதைப்பொருட்களை ஒழிக்கும் "முழு நாடுமே ஒன்றாக" தேசிய வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும்போது பல முக்கிய செயற்பாடுகள் குறித்து பிரதானமாகக் கவனம் செலுத்தப்படுகின்றது. நச்சுப் போதைப்பொருட்களை பயன்படுத்துபவர்கள், விற்பனையாளர்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல், நச்சுப்போதைக்கு அடிமையானவர்களுக்கு முறையான புனர்வாழ்வு அளித்தல், இந்த அச்சுறுத்தலுக்கு எதிராக முழு சமூகத்தையும் தயார்ப்படுத்தும் வகையில் அவர்கள் மத்தியில் கருத்துருவாக்கம் செய்தல், தொடர்புடைய அரச நிறுவனங்கள் உட்பட அனைத்து தரப்பினரும் ஒரு பொதுவான குறிக்கோளுக்காக ஒன்றிணைந்து செயற்படுதல் மற்றும் நச்சுப் போதைப்பொருட்களை இல்லாதொழிக்கும் பணியில் இணைந்ததான பிரசார நடவடிக்கைகள் ஆகிய பிரதான பணிகள் இதற்கு இணையாக செயற்படுத்தப்படுகின்ற செயற்பாடுகளாகும்.

பொலிஸ் ஊடக பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின்படி 2025.10.30ஆம் திகதியிலிருந்து 2026.01.13 வரையான காலப்பகுதியில் "முழு நாடுமே ஒன்றாக" தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நச்சுப் போதைப்பொருள் சுற்றிவளைப்புகளின் எண்ணிக்கை 69,960 ஆகும். இதன் கீழ் 19,318 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவற்றுள் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படும் சந்தேகநபர்களின் எண்ணிக்கை 1,446 ஆகும். 58 சந்தேகநபர்களுக்கு எதிராக சட்டவிரோத சொத்துக்களை வைத்திருத்தல் தொடர்பான விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதுவரை நச்சுப் போதைப்பொருள் பாவனைக்காக கைது செய்யப்பட்ட 1,384 பேர் புனர்வாழ்வளிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

நச்சு போதைப்பொருள் பரவலால் ஏற்படும் சுகாதார, சமூக மற்றும் பொருளாதார சீரழிவைத் தடுக்கவும், சமூகப் பாதுகாப்பை உருவாக்கவும் "முழு நாடுமே ஒன்றாக" தேசிய வேலைத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. (ம-7)

## யாழ்ப்பாணம்...

இன்று காலை மன்னார் திருக்கேதீச்சரத்தில் இடம்பெறும் பொங்கல் நிகழ்வில் பங்கேற்பார்.

பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாணம் வேலணை ஐயனார் கோவில் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் வட மாகாண தைப்பொங்கல் விழாவில் பங்கேற்கும் ஜனாதிபதி, சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக யாழ்ப்பாண சுற்றுலா சபையால் மானிப்பாய் மருதடி விநாயகர் கோவிலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தைப்பொங்கல் விழாவிலும் பங்கேற்கவுள்ளார்.

தொடர்ந்து நாளை 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை "தமக்கென ஒரு இடம் - அழகான வாழ்க்கை" என்ற தொனிப்பொருளின் கீழ் நாடு முழுவதும் 31,218 புதிய வீடுகளை நிர்மாணிக்கும் வேலைத்திட்டம் உட்பட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தினால் இன்னும் வீடுகளின்றி உள்ள 2,500 குடும்பங்களுக்காக வீடுகளை நிர்மாணிக்கும் வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் முற்பகல் 9.00 மணிக்கு யாழ்ப்பாணம், சாவகச்சேரி வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

மேலும், போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான 'முழு நாடுமே ஒன்றாக' தேசிய செயற்பாட்டின் வட மாகாண நிகழ்ச்சித் திட்டம் நாளை பிற்பகல் யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் ஜனாதிபதியின் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-7)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 17.12.2025 (புதன்கிழமை) அன்று சிவபதமடைந்த எங்கள் தெய்வம்

அமரர் பரமுப்பிள்ளை சோமஸ்கந்தராஜா


அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (16.01.2026) வெள்ளிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெறும். தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் பகல் 11.30 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் அளித்தவர்களுக்கும் துண்டுப்பிரசுரங்கள், பதாதைகள் மூலம் மரியாதை செலுத்திய உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஈஸ்வரி வாசா,
இளையதம்பி பிளேஸ், கொற்றாவத்தை. (C-4818)

இங்ஙனம்:-
குடும்பத்தினர்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலிகள் 22ஆம் ஆண்டு



தோற்றம் 21 - 05 - 1943

மறைவு 07 - 01 - 2024

அமரர் கமலாதேவி பேரானந்தம்

திதி : அபரபட்ஷ துவாதசி

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் இருவரின்
முகங்களும் உயிர்வாழும்.
ஆண்டுகள் பல சென்றாலும்
நெஞ்சம்விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



தோற்றம் 11 - 12 - 1974

மறைவு 15 - 01 - 2004

அமரர் பேரானந்தம் உமாசுதன் (போட்டோ சுதன்)

"காராளர் வளவு" அல்வாய் கிழக்கு, அல்வாய். (C-4820)

துயரால் பிரிவுறும் : குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் வழிப்பட காரியங்கள் செய்யும் அழகிய வாழ்க்கை வாழுங்கள்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழர் திருநாளாகப் போற்றப்படும் தைப்பொங்கல்

இன்று தைப்பொங்கல். உத்தராயண காலத்தின் தொடக்கம். தேவர்களுக்கு பகல் பொழுது விடிகின்ற நாள்.

இந்நாளில் சூரியபகவானுக்குப் பொங்கல் செய்து வழிபாடாற்றப்படுகின்றது.

இவ்வாறு தங்களின் வேளாண் விவசாயத்துக்கு உறுதுணையாக இருந்த சூரிய பகவானுக்கு நன்றி செலுத்துவதன் பொருட்டே தைத்திங்கள் முதலாம் நாள் சூரியப்பொங்கல் இடம்பெறுகின்றது.

இத்தகு சிறப்பிற்குரிய தைப்பொங்கல் தமிழர் திருநாளாகப் போற்றப்படுவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

அதில் ஒன்று, தமிழர்களின் பிரதான தொழிலாக வேளாண் விவசாயம் விளங்கிற்று.

எனவே விவசாயத்தைத் தமது உயிர்நாடியாகக் கொண்டிருந்த தமிழ் மக்கள் தமது விவசாயத்துக்கு உறுதுணை புரிந்த சூரியக் கடவுளுக்கு பொங்கிப் படைத்து தங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர். இங்குதான் நன்றி என்பது தமிழர்களின் பண்பாடாக – வாழ்வியலாக அமைகிறது.

ஆக, உழுதுண்டு வாழ்கின்ற பெருமைக்குரிய இனமாகிய தமிழர்கள் தை மாதம் முதலாம் திகதி கதிரவனுக்குப் பொங்கல் செய்வதாலும் நன்றி செலுத்துவதை தமது உய்வுக்குரியதாகக் கருதுவதாலும் தைப்பொங்கல் தமிழர் திருநாளாயிற்று.

இங்குதான் தைப்பொங்கல் என்பது நிலத்தை உழுது பண்படுத்திப் பாடுபட்டு விளைவித்த தானியங்களையும் பயன்தரு பழமரங்களை நாட்டி அவற்றின் அறுவடையாகப் பெற்ற முக்கனி உள்ளிட்ட பழவகைகளையும் நனி பசு பொழியும் பாலையும் முற்றல்களையிடையேயிய கரும்பின் சாறையும் தூய பசுநெய்யையும் இனிய பூக்கள் தருகின்ற தேனையும் கற்கண்டும் கலந்து சர்க்கரைப் பொங்கல் செய்து தென்னையின் இளநீரும் இலட்சுமிகரமான தாம்பூலமும் கொண்டு சூரியபகவானுக்கு நிவேதனம் செய்து நன்றி செலுத்துவதே தைப்பொங்கலின் தத்துவமாகும்.

இருந்தும் இப்போதெல்லாம் தைப்பொங்கல் வர்த்தகப் பொங்கலாகிவிட்டது. அரிசி, சர்க்கரை, பயறு என்பன மட்டுமல்ல பானை, அகப்பை, அடுப்பு, தென்னங்குருத்தோலை, கரும்புக் கட்டு, சொல்லிய பழவகை, இளநீர், கஜு, பிளம்ஸ், ஏலம் என அனைத்தும் பொங்கல் பொதியாய் விற்பனைக்கு வந்தாயிற்று. இனி தணல் ஒன்றே எஞ்சியுள்ளது.

வருங்காலத்தில் பொங்கிய பொங்கலைச் சூடாறாமல் அப்படியே வாங்கி வந்து பகலவனாகிய சூரியனுக்கு படையல் செய்து, உண்டு களிக்கும் விசித்திரங்கள் நடந்தாகும்.

அன்புக்குரியவர்களே! தைப்பொங்கலின் உள்ளார்ந்தம்; ஒவ்வொரு குடும்பத்தினரும் தமது உணவுக்குத் தேவையான நெல்லை விளைவிப்பதும் வீட்டுத் தோட்டங்களில் முக்கனிகளை உற்பத்தி செய்வதும் குளிர் இளநீர் தரும் தென்னைகளை நாட்டுவதற்குமான ஏற்பாடாகும் என்ற மகத்துவம் அறிந்து; இனியேனும் உங்கள் தோட்டத்தில் – வயலில் – வீட்டு வளவில் விளைவித்தவற்றை சமர்ப்பித்து சூரியனுக்குப் படையல் செய்யுங்கள். அதுவே உண்மையான சூரியப்பொங்கல் – தைப்பொங்கல் ஆகும்.

# போதைக்கு அடிமையானவர்களை மீட்டெடுக்க யாழில் புனர்வாழ்வு நிலையம் அமைக்கப்படும்

## அமைச்சர் ஆனந்த விஜேபால

(யாழ்ப்பாணம்)

போதைக்கு அடிமையானவர்கள் குற்றவாளிகள் அல்ல அவர்கள் சமூகத்தில் சிகிச்சையளிக்கப்பட வேண்டிய நோயாளிகள் எனத் தெரிவித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, போதைக்கு அடிமையானவர்களை மீட்டெடுக்க யாழ்ப்பாணத்தில் சகல மருத்துவ வசதிகளுடன் கூடிய நவீன புனர்வாழ்வு நிலையம் ஒன்று அமைக்கப்படும் என்றார்.

கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மாவட்ட செயலகங்களில் இடம்பெற்ற விஷ போதைப்பொருட்களை முழுமையாக ஒழிப்பதற்கான "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய செயற்பாடு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாவட்டச் செயற்பாட்டுக் குழுவை உருவாக்குவதற்கான கலந்துரையாடல்களில் பங்கேற்றிருந்தார்.

அந்தவகையில், யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர்,

போதைப்பொருளின் பரவலின் ஆபத்தான கட்டம் தற்போது ஏற்பட்டுள்ளது. இன்றைய சிறுவர்களான நாளைய தலைவர்களை ஆற்றுப்படுத்துகின்ற வழிபடுத்துகின்ற ஒரு அரிய செயற்பாடாக இந்த செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

போதைவஸ்துக்களுக்கு எதிராக முப்படைகளும் பொலிஸாரும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் ஆனால் பொலிஸ், முப்படைகளால் மட்டுமே இதனை ஒழிக்க முடியாது அனைத்து மக்களும் ஒன்றிணைந்தாலே இதனை ஒழிக்க முடியும்.

ஜனாதிபதி தலைமையில் இதற்கான தேசிய சபை நிறுவப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக ஒவ்வொரு மாவட்டங்களிலும் மாவட்ட மட்டக் குழு அமைக்கப்படும். அதனடிப்படையில் இன்று யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மட்டத்தில் இதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதேபோல் அரச திணைக்களங்களிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. நாட்டின் 25 மாவட்டங்களிலும் தலா ஒரு மருத்துவக் கூறுகளுடன் கூடிய புனர்வாழ்வு நிலையங்கள் அமைப்பதற்காக நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் புனர்வாழ்வு நிலையம் அமைக்கப் பொருத்தமான கட்டடத்தை ஒதுக்குமாறு கடற்றொழில் அமைச்சர் மற்றும் அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு பெறுபவர்களில் சுமார் 5,000 பேருக்கு கைத்தொழில் அபிவிருத்தி சபை ஊடாக வேலை வாய்ப்புகளை வழங்க உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

போதைப்பொருள் தொடர்பான தகவல்களை பொதுமக்கள் அச்சமின்றி வழங்குவதற்காக 1818 என்ற விசேட தொடர்பு இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தகவல்களை வழங்குபவர்களின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும்.

கட்சி, சாதி, மதம் பேதம் இன்றி குழந்தைகளின் எதிர்காலத்தை வளப்படுத்துவதற்காக நாடு முழுவதும் போதை ஒழிப்பதற்கான பொறிமுறையை ஏற்படுத்த அனைவரும் உயிர்ப்புடன் இதற்குப் பங்களிப்புச் செய்யவேண்டும் என்றார். (ம-7)

### யாழ். மின்சார நிலைய வீதி

# ஒரு வழிப்பாதையானது வாகனத் தரிப்பிடமாகவா!

## பொதுமக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கில் ஒருவழிப்பாதையாக மாற்றப்பட்ட மின்சார நிலைய வீதி தற்போது வாகனத் தரிப்பிடமா? என எண்ணும் அளவிற்கு மாறியுள்ளதாகப் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மின்சார நிலைய வீதியில் காணப்பட்டும் போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வாகவே போக்குவரத்துப் பொலிஸாரால் குறித்த வீதியானது அண்மையில் ஒருவழிப்பாதையாக மாற்றப்பட்டிருந்தது.

இருப்பினும் தற்போதைய பண்டிகைக் கால சூழலில் குறித்த வீதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு வருகை தரும் மக்களின் ... உள்ளிட்ட வாகனங்களை வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் அடுக்கடுக்காக நிறுத்திச் செல்வதால் மின்சார நிலைய வீதியின் ஒரு பகுதி வாகனத்தரிப்பிடம்போல காட்சியளிக்கிறது.

இதனால் குறித்த பகுதிகளில் மீளவும் வாகன நெரிசல்கள் அதிகரித்துள்ளதாகவும் விபத்துகள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ள பொதுமக்கள், இவ் விடயத்தில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடன் தலையிட்டு, ஒருவழிப் பாதையில் முறையற்ற விதத்தில் வாகனங்கள் நிறுத்தப்படுவதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். (ம-7)

### வடமராட்சியில் நாளை

# தரம் 11 மாணவர்களுக்கு இலவசக் கல்விச் செயலமர்வு

சிரேஷ்ட சட்டத்தரணி வேலாயுதன் தேவசேனாதிபதி (அருள் கல்வி வட்டம்) அவர்களின் ஏற்பாட்டில் வடமராட்சி வலயத்திற்கு உட்பட்ட தரம் 11 மாணவர்களுக்கு இலவச செயலமர்வொன்று நாளை (16) வெள்ளிக்கிழமை மு.ப 8.30 தொடக்கம் பி.ப 2.00 மணி வரை நெல்லியடியில் அமைந்துள்ள நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு பாடவிதானம் தொடர்பான விசேட கையேடுகள், கடந்த கால வினா-விடைத் தொகுப்புப் புத்தகங்கள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இந்தச் செயலமர்வில் கலந்துகொள்ளும் மாணவர்கள் அனைவரும் பாடசாலைச் சீருடையுடன் உரிய பொறுப்பாசிரியர்களுடன் இணைந்து வருகை தருமாறு ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ம-7)

# பூட்டிய அறைக்குள் பெண்ணின் சடலம்

## கந்தர்மடத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)


தனது வீட்டில் தனித்து வசித்துவந்த பெண்ணொருவர் அவரது வீட்டிலிருந்து சடலமாக நேற்று (14) மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கந்தர்மடம் இந்து மகளிர் ஒழுங்கையில் தனது வீட்டில் தனித்து வசித்து வந்த பெண் ஒருவரின் நடமாட்டம் சில நாட்களாக இல்லாததால் அயலில் உள்ளவர்கள் அது குறித்து அப்பகுதி கிராம சேவையாளருக்கு அறிவித்தனர்.

இதனையடுத்து கிராம சேவையாளர் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்து பூட்டியிருந்த வீட்டை உடைத்துப் பார்த்த போது, பிரஸ்தாபப் பெண் உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

இதனையடுத்து சடலத்தை மீட்ட பொலிஸார் அதனை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## செஞ்சொற்செல்வரின் பொங்கல் வாழ்த்துச் செய்தி


தமிழர் திருநாட்களில் பொங்கல் பண்டிகை முக்கியமானது. இயற்கைத் தெய்வமாகிய சூரியனையும் உணவுக்கு உயிர்நாடியாக விளங்கும் உழவர் பெருமக்களையும் போற்றுகின்ற திருநாள் பொங்கல் திருநாள் ஆகும். தென்கிழக்காசியா முழுவதும் தமிழர்கள் காலத்திற்குக் காலம் வாழ்ந்தார்கள். சமய நம்பிக்கையோடு தங்கள் பண்பாட்டைப் பேணினார்கள். ஆதிச்சமயம் ஆகிய சைவசமயம் இன்றுவரை பொங்கிப் படைக்கும் பண்பாட்டை பேணி வருகிறது. பொங்கல் நாள் நித்தமும் வெளிச்சம் தரும் இயற்கைத் தெய்வமாகிய சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் நன்நாளாக இன்றுவரை நாம் கருதுகின்றோம். இத்திருநாளில் அனைவரும் தம் இல்லங்களைப் புனிதப்படுத்தி தாம் வசிக்கும் வீட்டு வாயிலில் பொங்கிப் படைத்தல் வேண்டும். மூத்தோரை நாடி அவர்களின் பாதங்களைப் பணிந்து வணங்கி நல்லாசிகள் பெற வேண்டும். உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் வாழ்த்துத் தெரிவித்து அன்பின் வலிமையைப் பெருக்க வேண்டும்.

எங்கள் மண்ணில் கடந்த மாதம் "டித்வா" புயலின் பாதிப்பு பலரை வருத்தியது. மகிழ்ச்சியாய் வாழ்ந்த மலையக மக்களுக்கு அதிர்ச்சியை தந்துவிட்டது. அப்பாவி உயிர்களைக் காப்பதற்குத் தம்மை அர்ப்பணித்து பலர் பணி செய்துள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல உதவிக்கரங்களை நீட்டியுள்ளனர். மனித நேயம் இன்னும் வற்றிப்போகவில்லை. எனவே மனிதர்களாகிய நாம் எல்லோரையும் நேசிக்க வேண்டும். இதைக் கற்றுக்கொடுப்பதற்கு இறைவன் சில அனர்த்தங்களை உருவாக்கி மனிதர்களைச் சிந்திக்க வைக்கிறான் போலும்.

எங்கள் நாட்டில் இன்னும் இனப்பிரச்சினை தீர்த்து வைக்கப்படவில்லை. இந்த அரசாங்கம் இனப்பிரச்சினையை தீர்த்து வைக்கும் எனப் பலரும் எதிர்பார்க்கிறார்கள். இது விரைவில் சாத்தியமாக வேண்டும். அதற்கு இறையருள் கைகூட வேண்டும் "உண்மையான உறுதிமொழிகள் உறங்கக்கூடாது" சகல தமிழ் தலைவர்களும் யதார்த்த நிலையை உணர்ந்து ஒன்றுபட்டு ஒற்றுமையாக நல்ல தீர்வு காண வேண்டும். மக்கள், மக்கள் பிரதிநிதிகள் தொடர்பாக மனதை இழந்து தவிக்கிறார்கள்.

எனவே கோபங்களை வளர்க்காமல் நல்ல விடயங்களைச் சாதிப்பதற்கு ஒன்றுபட்டு உழையுங்கள். இளைய சமுதாயம் விழிப்படையுங்கள். "பாடுபட்டு உழைப்பவர்க்கே நல்ல எதிர்காலம் உண்டு" என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். அவப் பொழுதைத் தவிர்த்து ஒவ்வொரு நிமிடத்தையும் பயனுள்ள காரியங்களைச் செய்ய முற்படுங்கள். பொங்கல் நாள் முதல் அனைவரும் புதிய மனிதர்களாக எம்மை நாம் ஆற்றுப்படுத்துவோம். அனைவருக்கும் இதயபூர்வமான பொங்கல் வாழ்த்தினையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகிறேன்.

**கலாநிதி. ஆறு திருமுருகன்,**
**தலைவர் ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை,**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை.**



## தைத்திருநாளில் இயற்கை அன்னையை போற்றி வழிபாடு செய்து மேன்மையுறுவோம்!

ஆதித்த பகவான் மகர ராசியில் பிரவேசிக்கும் புண்ணிய காலமாகிய தைத்திருநாளின் மேன்மையால் உலக மக்கள் யாவரும் சுபீட்சமான வாழ்வு பெற இறைவருளை இறைஞ்சுகின்றோம். எமது நாட்டின் அடிப்படைப் பொருளாதார கருமமாகிய வேளாண்மை சிறப்புறவும், அதனோடிணைந்த பண்ணைத் தொழில்கள் வளம் பெறவும் சீரான பருவ காலங்களால் அனைத்து வளங்களும் மேன்மையுற இயற்கை அன்னையை போற்றித் துதி செய்வோம்.

இயற்கையின் கொடைகளான நிலம், நீர், வாயு என்பன மாசுபடாத வண்ணமும், வளங்கள் சேதமுறாவண்ணமும் நாமும் எமது எதிர்கால சந்ததியினரும் தத்தம் பொறுப்புக்களை உணர்ந்து அறநெறியில் வாழ்நாள் கருமங்களை மேற்கொள்வதன் மூலமே இறையருள் எமக்கு கைகூடும் என்பதை உணர்ந்து செயற்படுவோமாக.

**கலாநிதி சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்,**
**தலைவர், சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியம்.**

## சீரோங்க வருகின்ற தைத்திருநாள்...!!

அருணன் விழித்தெழ ஆகாயம் துலங்கிட
குருகினம் சிறகடித்துப் பாட
இருளும் நீங்கவெழு வைகறை புலர்ந்திட
உருகிடும் பனித்துளிகள் மின்ன,
தாணு மாலயன் கோயில்க ளெங்கும்
தண்ணார் மணியோசை கேட்க
மண்ணோர் மகிழ்ந்திட மங்கலம் நிறைந்திடத்
தானும் மலர்ந்தாள் தைப்பெண்ணாள்!
ஊருக்கு உணவளிக்கும் உழவனுக்கும் ஏர்தாங்கும்
எருதுக்கும் தீருநாள் தையொன்று!
பாருக்குள் விளைகின்ற பயிருக்கு உயிராகும்
பகலவனைப் போற்றுதலும் தையொன்றே!
காலத்தின் கோலமதாய் விளைந்த துன்பமெலாம்
களைந்தே நலமளிக்கும் தையெனவே
ஞாலத்தின் விளக்காக வழிகாட்ட வருகின்ற
சீலமுள தைமகளை வரவேற்போம்!!



**நீர்வை**
**இரா.தில்லைராஜன்**

## புன்னகை மிளிர போற்றுவோம் வாரீர்



உழுது பயிரிடும் உழவர்கள் உவகையுடன்
உடன்வரு உறவினர்களோடொன்று கூடி
தொழுவில் பெற்ற பாலுடன் பதமும் கலந்த
பொங்கல் பகவானுக்கு பூரிப்புடன் படைத்து
தொழுதிடும் பயனும் துயரங்கள் நீங்கி
தக்க பந்த பாசங்களுடன் குலவி மகிழும்
பொழுது பொங்கல் திருநாளில் ஒன்றாய்
புன்னகை மிளிர போற்றுவோம் வாரீர்

**கலாபூசணம் மு.தணிகாசலம், கற்கோவலம்**

# சூரியனைப் போற்றும் பொங்கல் திருநாள்



சூரியன் - கண்ணுக்குத் தெரியும் கடவுள். அவன்முன் தான் இந்த உலகம் இயங்குகிறது. அவனை உதய வேளையில் கண்டு, கைகூப்பி வணங்கும் பெரியவர்கள் இன்றும் இருக்கிறார்கள். அருணோதயத்தில் எழுந்து சூரியனுக்கு அர்க்கியம் விடுவதைத் தம் அன்றாடக் கடமைகளின் தொடக்கமாகக் கொண்டிருப்பவர்கள் அநேகர். காரணம், அவரே இந்த உலகின் சக்தி. உலக உயிர்களுக்கெல்லாம் ஆற்றல் அவரிடம் இருந்துதான் பிறக்கிறது. தாவரங்கள் சூரிய ஒளியைக் கொண்டே உணவை உற்பத்தி செய்கின்றன. அதனால்தான் வேதங்கள், 'ஆயுளை வளர்க்கும் அன்ன ரூபம்' என்று ஆதவனைப் போற்றுகின்றன.

சூரியனே நம் ஆரோக்கியத்துக்கு அதிபதி. 'சுகத்துக்கு சூரியனை வணங்கு' என்பது ஆன்றோர்கள் வாக்கு. மேலும், சூரியனின் அருள் இருந்தால் மனதில் உற்சாகம் அதிகரிக்கும். உடலும் பலம் கொள்ளும். ராமாயணத்தில் ஒரு நிகழ்வு... ராம ராவண யுத்தம் நடக்கிறது. ராமனின் பாணங்கள் ராவணனின் தலையை அறுத்து எறிந்தன. ஆனால், வெட்ட வெட்டத் தலைகள் முளைத்துக்கொண்டே இருந்தன. பரமாத்மாவான ராமனே ஒரு கணம் சோர்ந்துபோனான். அப்போது அங்கே அகத்திய முனிவர் வந்தார்.

இந்த உலகத்தில் வெற்றியை நமக்கு அருள்பவர் சூரிய பகவான். அவரைத் துதித்தால் மனமும் உடலும் உற்சாகம் அடையும் என்று சொல்லி, 'ஆதித்ய ஹ்ருதயம்' என்னும் அற்புதத் துதியை உபதேசித்[illegible] துதியைச் சொல்ல, சோர்வு நீங்கிப் புத்துணர்ச்சி உண்டானது. ராவண வதம் நிகழ்ந்தது. அன்று முதல் இன்று வரை ஆதித்ய ஹ்ருதயம் பக்தர்களுக்கு ஆரோக்கியமும் புத்துணர்ச்சியும் வெற்றியும் அளிக்கும் துதியாகத் திகழ்கிறது.

இத்தகைய சிறப்புகளை உடைய சூரிய வழிபாட்டில், மிகவும் முக்கியமான நாள் பொங்கல் பண்டிகை. முதன் முதலில் கிருஷ்ணனின் மகனான சாம்பன், தன் சாபம் நீங்க இந்த வழிபாட்டைச் செய்தான் என்கின்றன ஞான நூல்கள். தமிழர் வாழ்வியலிலும் பொங்கல் முக்கியமான பண்டிகையாகத் திகழ்கிறது.

தமிழ் மாதங்களில் மகர மாதத்தில் சூரியன் அடியெடுத்து வைக்கும் [illegible]தை முதல் நாள் என்று போற்றுகிறோம். அன்றே பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது. அந்த நாளில் நாம் செய்யும் சூரிய வழிபாடு நமக்கு அடுத்த ஓர் ஆண்டு முழுமையும் வளத்தையும் செல்வத்தையும் அருளும் என்பது நம்பிக்கை.

மகர சங்கராந்தி தினமான பொங்கல் நாளில் சூரியனின் நகர்வை அடிப்படையாகக் கொண்டு அடுத்த ஓர் ஆண்டு எப்படி அமையும் என்று சொல்லும் மரபும் ஜோதிட சாஸ்திரத்தில் உண்டு. அந்த வகையில், இந்த நாளில் செய்யும் சூரிய வழிபாடு மிகவும் இன்றியமையாததாகிறது. எனவே, பொங்கல் பண்டிகையைத் தவறாமல் கொண்டாடி ஆதவனை வழிபட்டு ஆரோக்கியமும் ஆனந்தமும் அடைவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால்மா...

வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி 1 கிலோகிராம் பால்மா பொதியொன்றின் விலை 125 ரூபாயி னால் குறைக்கப்படவுள்ளது.

அத்துடன் 400 கிராம் பால்மா பொதியொன்றின் விலையை 50 ரூபாயினால் குறைப்பதற்கும் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

நாளை 16 ஆம் திகதி முதல் இந்த புதிய விலை அமுலாகும் என வர்த் தக அமைச்சு அறிவித்துள்ளது. (ம-7)

## கட்சி அலுவலகம்...

நபர்களினால் தீ வைத்த சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் தடயவியல் பொலிஸார் விசாரணைகளை ஆரம் பித்துள்ளனர்.

கட்டிடத்தின் வாயில் பகுதியில் இரண்டு பேர் பெற்றோல் ஊற்றித் தீ வைத்துத் தப்பிச் செல்வது அங்கு பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமராக்களில் பதிவாகியுள்ளது.

பூட்டப்பட்டிருந்த இரும்புக் கதவு களுக்கே தீ வைக்கப்பட்டமையால் பெரியளவிலான சேதங்கள் ஏற்பட வில்லை.

சர்வஜன அதிகாரம் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரான அருண் சித்தார்த்தின் கட்சி அலுவலகத் திற்கே இவ்வாறு தீ வைக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## யாழ்.போதனா....

சாலைக்கு நேற்று அதிகாலை 1.40 மணியளவில் போதையில் இரத்தக் காயங்களுடன் ஒருவர் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்ட நிலையில் 24ஆம் இலக்க விடுதியில் அவர் தங்கவைக்கப்பட்டு சிகிச்சை வழங் கப்பட்டது.

குறித்த நபர் தாதிய உத்தியோகஸ் தர்களுடன் முரண்பட்டதோடு விடுதி யில் ஏனைய நோயாளர்களுக்கு சிர மங்களை ஏற்படுத்தும் விதமாக நடந்து கொண்டார்.

அதனையடுத்து பாதுகாப்பு உத்தி யோகஸ்தர்களுக்கு அறிவிக்கப் பட்டதையடுத்து, அவர்கள் விடுதிக்கு விரைந்து குறித்த நபரை கட்டுப் படுத்த முயன்றபோது தனது உடை மையில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து அச்சுறுத்தியுள் ளார்.

அதனையடுத்து அவரை பாது காப்பு உத்தியோகஸ்தர்கள் மடக்கி பிடிக்க முற்பட்ட வேளை பாதுகாப்பு உத்தியோகஸ்தர் ஒருவருக்கு கத்தி யால் வெட்டிவிட்டு அங்கிருந்து தப்பி யோடியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-7,33,104)

## கஞ்சாவுடன்...

பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பின்போது குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 28 கிலோகிராம் கஞ்சா பறிமுதல் செய் யப்பட்டுள்ளது.

கைதானவர்கள் 23 மற்றும் 47 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

அவர்களை நீதிமன்றில் முன்னி லைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7)

## வடக்கு மாகாண...

இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் மத்யூ டக்வொர்த் யாழ்ப் பாணத்தில் அமைந்துள்ள தேசிய மக்கள் சக்தி அலுவலகத்துக்கு நேற் றுப் புதன்கிழமை விஜயம் மேற் கொண்டு கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகருடன் கலந்துரையாட லில் ஈடுபட்டபோதே இவ்விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

தூதுவரிடம் கடற்றொழில் அமைச் சர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் மீது வடக்கு மக்கள் வைத்துள்ள நம்பிக்கை, அந்த நம்பிக் கைக்கு துரோகம் இழைக்காத வகை யில் அரசாங்கத்தால் பலவேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப் படுகிறது.

போருக்குப் பிந்தைய மீட்சி அரசி யலை வெறும் வாக்குறுதிகளாக அல்லாமல், செயற்பாடுகளாக மாற் றும் உறுதியான அரசியல் தீர்மானங் களே இன்று வடக்கில் முன்னெடுக் கப்பட்டுவரும் அபிவிருத்திகளுக்குப் பின்னணி.

குறிப்பாக மீன்வளம், கடற்றொழில், நீரியல் வளங்கள் பாதுகாப்பு, கடல் சார் பொருளாதாரத்தை வலுப்படுத் தும் திட்டங்கள் ஆகியவை வடக்கு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த் தும் வகையில் முன்னெடுக்கப்படு கின்றன என்றார்.

அதற்குப் பதிலளிக்கும் முகமாக அவுஸ்திரேலியத் தூதுவர் தெரிவிக் கையில்,

தேசிய மக்கள் சக்தி ஆட்சி ஊழ லற்ற அரசாங்கமாக உருவெடுத்து வருவது தெளிவாகப் பிரதிபலிக் கிறது. வெளிப்படைத்தன்மை, சட்டத் தின் ஆட்சி மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் செயற் படும் இந்நிர்வாக முறை சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையைப் பெற்றுள் ளது.

வடக்குமாகாண அபிவிருத்தி தொடர்பில், முடிந்த முழுமை யான ஒத்து ழைப்பை அவுஸ் திரேலியா வழங் கத் தயார்.

குறிப்பாக வடக்கில் காணப் படும் முதலீட்டு வாய்ப்புகள், தொழில்துறை வளர்ச்சி, வேலை வாய்ப்புகள் மற் றும் நிலையான பொருளாதார மேம்பாடு தொடர் பில் ஆழமாக ஆராயப்படும்.

வடக்கின் அபி விருத்தி முயற்சி கள் அரசியல் ஸ்திரத்தன்மையு டனும் தெளி வான கொள்கை வழிநடத்தலுட னும் முன்னெ டுக்கப்படுவதை அவுஸ்திரேலியா வரவேற்கிறது.

இலங்கையில் இனவாதம் தோற்கடிக்கப்பட வேண்டும். மக் களின் வாழ்வில் பல தசாப்தங் களாகப் பதிந் துள்ள வலியும் வடுக்களும் ஆற வேண்டும். வெறும் சமாதா னக் கோஷங் களால் அல்ல. நீதியும் சமத்துவ மும் அடிப்படை யாகக் கொண்ட உண்மையான நல்லிணக்கம் இந்நாட்டில் பிறக்க வேண் டும் என்பதே எதிர்பார்ப்பாக உள்ளது எனத் தெரி வித்தார். (ம-7)

## மின்சாரக்...

மின் கட்டணத்தை அதிகரிக்காமல் இருப்பதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு அந்த ஆணைக்குழு இந்த விட யத்தை தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் ஜனவரி முத லாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மின் கட்டணத்தை 11.57% ஆல் அதிகரிப்பதற்கு இலங்கை மின்சார சபை பொதுப் பயன் பாடுகள் ஆணைக்குழுவிடம் அண்மை யில் கோரிக்கை விடுத்திருந்தது.

எனினும் 2026ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் மின் கட்டணத் திருத்தத்தை மேற்கொள்ளாதிருப் பதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2026.01.14
சீட்டிழுப்பு இலக்கம் 6074
U 4 1 5 4 6 4
அத சம்பத
U 5 4 6 4
சீட்டிழுப்பு இலக்கம் 0649
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2026.01.14
சீட்டிழுப்பு இலக்கம் 199
கும்பம் 29 36 67
2319

தன நிதானய
திகதி - 2026.01.14
சீட்டிழுப்பு இலக்கம் - 2104
C 34 35 61 74 C
Double Chance

மெகா பவர்
திகதி 14/01/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2422
P 23 02 33 66 68

ஜய
திகதி 2026.01.14
சீட்டிழுப்பு இலக்கம் 0342
T 4 3 9 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4316
சீட்டிழுப்பு திகதி 14.01.2026
Z 08 60 61 67
Z

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.01.14
சீட்டிழுப்பு இலக்கம் 1383
கும்பம் 06 21 27 36 கும்பம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
ஜீபித சம்பத
14.01.2026 வெற்றி வாரம் 0782
G 5 0 2 0 4 9
ரூ.32,861,306.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3048
சீட்டிழுப்பு திகதி 2026.01.14 தினம் புதன்கிழமை
12 15 29 71 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 89,597,156.00
DLB

சனிதா
திகதி 14.01.2026 வெற்றி வாரம் 5209
13 37 38 56 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,629,708.40
DLB

சசிரி
வெற்றி வாரம் 878
சீட்டிழுப்பு திகதி 14.01.2026
27 32 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,764,280.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4760
சீட்டிழுப்பு திகதி 14.01.2026 தினம் புதன்கிழமை
13 35 44 55 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.8,034,492.00
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Z 31 05 43 60 67
2224
14.01.2026 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.620,515,476.40
DLB

ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2874
சீட்டிழுப்பு திகதி : 2026.01.14
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.78,089,904.00
25 56 69 72 T
DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

Pearson | Achievers International Campus

இல்லங்களிலும் உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்கட்டும்

# இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

உங்கள் உயர் தரத்தின் பின்னர் !

**Diploma Courses**

- Dual Diploma in ICT and English
- Dual Diploma in ICT and Business Management
- Dual Diploma in Business Management and English

**Undergraduate Courses**

- HND Computing
- HND Software Engineering
- HND Network Engineering
- HND Cyber Security
- HND Business

**Postgraduate Courses**

- PGD in Strategic Management and Leadership
- MBA (Top Up)

WES Approved | UGC Recognised | www.iaicampus.com | 0777 66 00 80

(C-4819)



33 ஆம் ஆண்டு

## நினைவஞ்சலி

அமரர்

**இ.ச.பேரம்பலம் ESP**

(வாரிவளவு, காரைநகர்)



தோற்றம் 06.04.1926 | மறைவு 19.01.1993

அன்பின் திருவுருவே
பண்பின் சிகரமே
பாசத்தின் உறைவிடமே
வணிகத்தின் சிகரமாய்
பார் போற்ற வாழ்ந்தீர்கள்
வளமான வாழ்விற்கு
வழிகாட்டியாய் திகழ்ந்தீர்கள்
வருடங்கள் 33 கடந்தாலும்
வாழ்க்கையில் மறப்போமா தங்களை
உங்கள் ஆத்மா சாந்திபெற
எல்லாம் வல்ல வாரிவளவு
கற்பக விநாயகர் பாதம் பணிந்து
வணங்கி நிற்கிறோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

383, மனிஓசை,
கோவில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
021 222 3119

லயன் கலாநிதி இ.ச.பே.நாகரத்தினம் PMJF
குடும்பத்தினர்

(1932)



**ஊடகக்கல்வி புதிய பிரிவுகள் ஆரம்பம்**

சுன்னாகம், யாழ்நகர்.
A/L 2026, 2027 மற்றும் 2026 DAY CLASS தனிப்பட்ட குழு அடிப்படையில் 25.01.2026 முதல் புதிய வகுப்புகள் ஆரம்பம்.
ஆசிரியர் Y.KONESALINGAM
**077 644 6514**

(C-4815)



**வேலையாட்கள் தேவை**

புத்தூரில் இயங்கும் அரைக்கும் ஆலை ஒன்றிற்கு வேலை ஆட்கள் (ஆண்) தேவை.

**077 373 5261**

(6569)



## வட இந்திய யாத்திரை

**காசி அயோத்தி சீரடிபாபா யாத்திரை**

ஆரம்பம் : 10.03.2026 நாட்கள் : 15 யாத்திரிகர்கள் : 15

தரிசிக்குமிடங்கள்

டெல்லி, அட்சயதாம். நாராயணர் கோவில், இந்திராகாந்தி வீடு. இந்தியா கேற். வேறு இடங்களும் பார்க்கலாம். ஆக்ரா, தாஜ்மகால், செங்கோட்டை, மதுரா, கிருஷ்ணஜென்ம பூமி. பிரேம்மந்திரம், அலகாபாத், கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணி சாங்கமம், சயன ஆஞ்சனேயர், நேரு வீடு. சங்கராச்சாரியார் மண்டபம், கயா, முன்னோர்களுக்கு பிதுர்கடன் சிரார்த்தம் செய்யும் இடம், புத்தகாய, புத்தாலயங்கள். காசி விஸ்வநாதர், விசாலாட்சி, காலபைரவர் உட்பட 15 இடங்கள் தரிசனம்

மாலை 6.30 இற்கு கங்கா ஆர்த்தி பார்த்தல் காசியில் 3 நாட்கள் தங்கி சீரடி பாபா தரிசனம்,சனி சிங்கனாப்பூர், இன்னும் பல இடங்களும் போகலாம். சீத்தாமடி, சீதை பூமியுள் புதையுண்ட இடம், திரியம்பகேஸ்வரர், ஜோதிலிங்கமும் மற்றும் இராமேஸ்வரம் 21 தீர்த்தமாடல், இராமேஸ்வரலிங்க வழிபாடு (சிவதரிசனம்), நவபாஷாணம், திருப்புலானி. உத்தரகோச மங்கை பார்த்து மதுரை மீனாட்சி தரிசனம் முடித்து சென்னை வருகை.

ஒரு நாள் சென்னையில் சொப்பிங் செய்யலாம். மறுநாள் நாடு திரும்பல்

**பெற்றுக்கொள்ளும் பணத்திற்கான எமது சேவைகள்**

5விமானப் பயணங்கள். 3 வேளை பிராமண சமையல் ஆட்கள் சமைத்த சைவ உணவு, ரீ, கோப்பி, மினரல் வோட்டர், AC வாகன வசதி, 2 பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரேன் கொமட், இணைந்த குளியலறை மேலும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லவும் பயணம் முடிய திரும்பி யாழ்ப்பாணம் வரவும் வாகன ஒழுங்கு வசதிகள் செய்து தரப்படும். மேலும் விபரங்களைக் கேட்டுப் பதிவு செய்யவும்.

விபரங்களுக்கு : கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன்: ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு -11. 077 736 2154
E-mail - sriranganathan2601@gmail.com

(1901)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தா[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org